# தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 26-10-57 | சனிக்கிழமை | இதழ் 17


# தென்றல் அலுவலகத்தில் போலீஸ் படையெடுப்பு!

## கவிதைகளைக் கைப்பற்றினர்!

அன்று சனிக்கிழமை!

அந்தி சாய்ந்து விட்டது. எறும்புகளைப்போல் மவுண்ட் ரோட்டில் மோட்டார்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. அந்த நேரத்தில் சென்னை எப்போதும் பரபரப்பாகவே இருக்கும். தொழில் புரிவோர் அனைவரும் அப்போதுதான் வெளியில் வருவார்கள். தெருவில் ஒரே ஆட்டமும் பாட்டமுமாக இருக்கும் - அப்போது! நமது 'தென்றல்' அலுவலகத்திலும் எல்லோரும் பணியை முடித்து விட்டு இல்லம் செல்ல ஆயத்தமாயிருந்தார்கள். அப்போது ஏழெட்டுப்பேர் அலுவலகத்திற்குள் நுழைந்தார்கள். அவர்களில் இருவரைத் தவிர மற்றவர்கள் போலிஸ்காரர்கள்.

உள்ளே வந்த அவர்கள், பத்திரிகையின் நிர்வாகியைச் சந்திக்கவேண்டுமென்றார்கள். நிர்வாகி அவர்களோடு பேசினார்.

"எங்கள் கையில் பரிசோதனை வாரண்ட் இருக்கிறது" என்றார்கள் போலீஸ்காரர்கள்.

"ஏன், எதற்காக?" - நிர்வாகி கேட்டார்.

"31 - 8 - 57ம் தேதிய 'தென்றல்' பத்திரிகையில் சர்க்காரின் கட்டளையை மீறி ஒரு கவிதையைப் பிரசுரித்திருக்கிறீர்கள்" - அவர்கள்.

நிர்வாகி அந்த இதழை எடுத்துப் பார்த்தார். அதில் **'இராமனின் மனப்போர்'** என்று ஒரு மொழிபெயர்ப்புக் கவிதை அச்சாகி இருந்தது. அந்த மொழிபெயர்ப்பின் மூலம், 'சரிதா' என்னும் இந்தி இதழில் பிரசுரமானது. இந்தியில் 'விசாரத்' பட்டம் பெற்ற துறையூர் ந. அலி என்பவர் அந்தக் கவிதையைத் தமிழ்ப்படுத்தி நமக்கு அனுப்பி யிருந்தார். அது, தென்றல் 31-8-57ம் தேதி இதழில் பிரசுரமாகியிருந்தது. அந்தக் கவிதையின் சாரம் சீதையை இழந்த இராமனின் மனக்குழப்பம் பற்றியது.

-நிர்வாகி இதழைப் பார்த்து விட்டு, "இந்தக் கவிதையைப் பிரசுரிக்கக் கூடாதென்று எங்களுக்கு ஒன்றும் சர்க்கார் உத்தரவு வரவில்லையே" என்றார்.

"கெஜட்டில் பதிவாகியிருக்கிறது" - என்று கூறி, 31-8-57ம் தேதி இதழ்கள் அனைத்தையும் கைப்பற்றிச் செல்லவேண்டும் என்றார்கள் வந்தவர்கள்.

அலுவலகத்தில் அந்த இதழ் பதினறுதான் இருந்தது. அவைகளை நிர்வாகி அவர்களிடம் கொடுத்தார். போலீஸ்காரர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை.

"எத்தனையோ ஆயிரம் அச்சடிக்கிறீர்கள்; மீதம் பதினறுதானா?" என்றார்கள்.

"உள்ளது இவ்வளவுதான். வேண்டுமானல் நீங்களே அலுவலகத்தைச் சோதனை போட்டுக் கொள்ளுங்கள்" என்று நிர்வாகி கூறினர்.

அவர்களும் சோதனை போட்டார்கள். சோதனை முடிந்ததும் அந்தக் கவிதை எழுதியவரின் கையெழுத்துப் பிரதி வேண்டும் என்றார்கள். அதுவும் எடுத்துக் கொடுக்கப் பட்டது. அந்த நேரத்தில் தான் நான் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தேன். நடந்தவற்றைச் சொன்னார்கள். போலிசாரும் சி. ஐ. டி. தோழர்களும், 'தென்றல்' அலுவலக நண்பர்கள் சோதனைக்கு ஒத்துழைத்ததை என்னிடம் பாராட்டினார்கள். நான் மகிழ்ந்தேன்.

சனிக்கிழமை இரவு ஏழு மணிக்குள் இந்தச் 'சோதனைத் திருவிழா' முடிந்து விட்டது. நமக்கு இது புதிதல்ல காங்கிரஸ்; அரசாங்கத்திற்கும் இது புதிதல்ல; கட்டை விரலை வெட்டிவிடுவேன்-என்றார்கள். ஜாமீன் தொகை கட்டவேண்டுமென்றார்கள். வழக்குத் தொடுப்பேன் என்று மிரட்டினார்கள்.

கண்ணதாசன்

அந்தக் கண்டங்களையெல்லாம் தாண்டித்தான் தி. மு. கழகம் வெற்றி முகப்பை எட்டியிருக்கிறது. இதுவரை எந்த வழக்கும் இயக்கத்தின் பக்கம் தோல்வி கண்டதில்லை. அதற்கே உரித்தானவர்கள் அரசியலார்தான்!

'சர்க்காரின் அடக்குமுறையினால் இராமாயணம் கடவுட்காதையாகக் கருதப்பட்டு விடும்' என்று அவர்கள் கருதுவார்களாயின் அது நகைப்புக்குரியதாகும்.

ஒரு காலத்தில், தென்னாட்டில் மட்டும்தான் இராமாயணத்தின் குறைபாடுகள் எடுத்துச் சொல்லப்பட்டன. அதுவும் திராவிட இயக்கம் மட்டுமே அந்த அறிவுப் பணியைச் செய்து வந்தது. இன்று அப்படியல்ல! வட நாட்டிலேயே இராமாயணத்தைக் கேலி செய்து எழுதத் தொடங்கி விட்டார்கள். காலம் வளர்ந்து விட்டது. இராமாயணத்தின் பெருங் குறைகள் வடவருக்கே புலப்பட்டு விட்டன. உண்மையைப் பரவவிடாமல் எந்தச் சர்க்கார் மறுத்தால் தான் என்ன? வடநாட்டு சர்க்காராக இருந்தாலும் சரி, தென்னாட்டுக் காமராசர் சர்க்காராக இருந்தாலும் சரி, வெற்றி உண்மையின் பக்கம் தானே கிடைக்கும்! அடக்குமுறை என்பது எதிர்க்கட்சிகளுக்கு உண்மையான நண்பனைப் போன்றது. அது தட்டிக் கொடுக்கும்! பயமுறுத்தி அடக்க நினைக்கும் பள்ளி ஆசிரியராக அதை எதிர்க்கட்சிக்காரர்கள் ஒருபோதும் மதிக்கமாட்டார்கள்

# டேராடூன் கடிதம்!

- சந்திரன் -

"என் சீலாவுக்கு

கடிதத்தை நீ எதிர்பார்த்திருக்கமாட்டாய்! இது நான் நான் உனக்கு, முதன் முதலாக எழுதும் கடிதமல்லவா? எப்படி எழுதுவது என்றே புரியவில்லை; இனிமேல் நான் ஏன் உனக்கு கடிதம் எழுதப்போகிறேன். முதலாவதும் கடைசியானதுமான இந்த எனது ஒரே கடிதத்தையாவது முழுவதும் படிக்காமலிருக்காதே!

பெண்களின் இதயத்தைப் புரிந்துகொள்வதென்பது மிகக் கடினமானது என்று கூறியவன் உண்மையிலேயே ஓர் சிறந்த மேதையாகத் தானிருந்திருக்க வேண்டும். அந்த வார்த்தைத் தொகுதிகளின் உண்மையை - உயிர்ச்சலனத்தை நான் இப்போது நேரடியாக அனுபவிக்கிறேன். உன்னைப் பற்றி இன்னும் எனக்கு சரியாகப் புரியவில்லை. ஆனால் என்னைப் பற்றி இந்தக் கடைசி நேரத்திலாவது உன்னிடம் சொல்லாமல் போக என் நெஞ்சம் ஏனோ இடந்தரவில்லை...!"

இந்த இடத்தை வாசித்ததும் சீலாவின் உடல் வியர்த்துவிட்டது. அவள் உள்ளம் துண்டாடப்பட்ட தவளையின் உடல் துடிப்பதுபோல துடித்தது. இதுவரை கடிதமே எழுதியிராத 'ராஜன்' மூன்று கடிதம் எழுதியிருக்கிறார். அதுவும் உள்ளம் சுக்குநூறாக வெடித்துச் சிதறிவிட்டதுபோல எழுதியிருக்கிறார். அப்படி என்ன நடந்துவிட்டிருக்க முடியும்? அவள் உள்ளம் பிடிகொள்ளவில்லை. மீண்டும் மேலே வாசித்தாள்...

"இனிமேல் நான் ஏன் உனக்கு கடிதம் எழுதப் போகிறேன்?"

"முதலாவதும் கடைசியானதுமான இந்த எனது ஒரே கடிதத்தையாவது முழுவதும் வாசிக்காமலிருக்காதே..."

"என்னைப்பற்றி இந்தக்கடைசி நேரத்திலாவது உன்னிடம் சொல்லாமல் போக என் நெஞ்சம் ஏனோ இடந்தரவில்லை."

எதையுமே விளையாட்டாக எடுத்துக்கொள்ளும் குழந்தை உள்ளம் கொண்ட சீலாவின் இருதயத்தின் அடித்தளத்தை அந்த விசித்திர வாக்கியங்கள் மெல்லத் தீண்டி, அவளின் சிந்தனை நரம்புகளை சற்றே முறுக்கேற்றிவிட்டன; அவள் சிந்தித்தாள்:

'ராஜன்'- அழகான பெயரைத் தாங்கிய அந்த உருவமும் அழகானதுதான். தங்கள் வீட்டுப் பக்கத்து வீட்டு மாடியில் வசிக்கும் அந்தப் பெயரின் சொந்தக்காரனை சீலா தினமும்தான் பார்த்திருக்கிறாள். அவசியமேற்பட்டபோது பேசியும், நெருக்கடி ஏற்பட்டபோது குறும்பு பேசியும், சந்தர்ப்பமில்லாதபோது முகஸ்துதிச் சிரிப்பாலும் தான் அவன் நினைவிலிருக்கிறானே தவிர வேறொன்றும் அதற்குமேல ஞாபகமில்லை. வீட்டுக்கு வருவான். தம்பியோடு "காரம்" விளையாடுவான். வெகுளி மாதிரி எப்பொழுதும். பல்லைக் காட்டிக் கொண்டிருப்பான். அந்த 'அசட்டை'யின் நெஞ்சத்தளத்தில் இப்படியும் ஒரு ஏக்கப் பெருமூச்சு நெளிந்துகொண்டிருக்க முடியுமா என்று இப்பொழுதுதான் சிந்திக்க ஆரம்பித்தாள்.

**அவன் அவளை விரும்பினான். ஆனால் அதை அவளிடம் வெளிப்படுத்த ஆற்றலில்லாதவனாக இருந்தான். அவளோ வேறொருவனைக் காதலித்தாள். அவன் அவளை விரும்பவில்லை-- இதை உணர்த்தும் உருக்கமான கடிதம் இது.**

(ஆ-ர்.)

சிந்தித்துக்கொண்டே தொடர்ந்து வாசித்தாள்...

"........சீலா! உன் இருதயத்தை சற்று திடமாக்கிக் கொண்டு இதை வாசி ..நான் உன்னை காதலிக்கிறேன்; இருதயபூர்வமாக அன்பு செலுத்துகிறேன். உன்னைப் பற்றிய எழிற் கனவுகள் என் நெஞ்சைத் துளைக்காத நேரமில்லை என்று சொன்னாலும் மிகையாகாது. இதைக் கூறி உன் அன்பை பெறவோ-காதலை அடையவோ நான் முயற்சிப்பதாக நீ நினைக்கக்கூடாது. எனக்கு நிச்சயமாகத் தெரியும், இதற்குப் பிறகு நீ விரும்பினால்கூட நான் உன்னை அடையமுடியாது. இதனால் நீ விரும்பியும் கிடைக்கமுடியாத எட்டாக்கனியாக நான் உயர்ந்துவிட்டேன் என்று கூறவில்லை. என் இதயத்தில் உனக்கென்று ஒதுக்கிவிட்ட ஓர் மூலையை நசுக்கிப் பிழிந்து உதிரத்தையெல்லாம் உலர்த்திவிட்டாலும் அங்கே செறிந்துள்ள காற்றுக்கூட உன் பிரதேசத்தை வேறெதற்கும் ஒதுக்கமுடியாது என்று ஓங்காரக் கூச்சலிட்டு உந்தித்தள்ளுகிறது. என்றைக்குமே அழிக்கமுடியாத ஓர் நிரந்தரமான இடத்தை, நீ பெற்றுவிட்டாய் என்றுதான் கூறவேண்டும். இதற்குள் என்னைப் பற்றி நீ கேள்விப் படாமலிருக்க முடியாது. அந்த அழைப்பிதழைக் கூட உன் பெயருக்கு எழுத என் கரங்கள் நடுங்குகின்றன. ஏன் சீலா அப்படி? உனக்குத் தெரியுமா? உன்னைக் கேட்கிறேன் பார்; நான் முட்டாள்!

சீலா! இந்த நேரத்தில் நான் உனக்கு கடிதம் எழுதுவதே தப்பு இல்லையா? என்ன செய்வது? எழுதாமலிருந்தால்,- என் எண்ணத் தொகுப்பை உன் கண்ணெதிரில் படைக்கவில்லையென்றாலும் ஏதோ மகத்தான தவறு செய்வதைப்போல உணருகிறேன்.

என்னை நீ காதலித்தாய்; ஏமாற்றிவிட்டாய் என்று கூறவில்லை. என்னை நீ பார்த்த பார்வைகளில் பலமுறை பரிவும் பச்சாத்தாபமும் பெருகி ஓடுவதை நான் உணர்ந்திருக்கிறேன். நீ என்னிடம் பேசியதில் ஒரு முறைகூட கோபமாக பேசியதில்லை. உன் சிரிப்பு, சிதையாத நெஞ்சைக்கூட இலகுவில் கிறிவிடும் சிரிப்பு! அந்தச் சிரிப்புதான், நசிந்துபோக இருந்த என் நாச எண்ணங்களுக்கு உயிரும் உணர்வும் தந்து வளர்த்துவிட்டது; இதை நீ மறுக்க முடியுமா?

பெண்கள் பேசாமல் அமைதியாகப் போனால் எந்த ஆண்மகனும் அவளை நிச்சயமாகத் தொந்தரவு செய்வதில்லை. மாறாக - விஷயத்தை அத்துடன் சுவாரஸ்யமில்லாமல் முறித்துக்கொள்ள விரும்பாத பெண்கள். உடலுக்கு சற்று துள்ளாட்டம் கொடுத்து மறுநாளுக்கான வெள்ளோட்டம் பார்க்கும் நினைப்போடு அவனுக்கு சாதகமாக இருப்பதுபோல பாவனை செய்யும் சில பல நிகழ்ச்சிகளாலே தான் சும்மாயிருக்கும் அந்த ஆடவர்கள் உள்ளம் சூறைபோவது மட்டுமல்லாமல் அவர்கள்நெஞ்சில் பெருத்த சூறாவளியையே கிளம்பிவிடுகிறது! அதிலும் தைரியமில்லாத ஆடவர்களோ, கேட்க வேண்டியதில்லை- அவள் லேசாக வெட்டித் திருப்பிய கழுத்தின் அசைவும்- கடைக்கண் வீச்சும் - மெல்லிய புன்சிரிப்புமே அவர்களுக்குப் போதுமே, சாகுமட்டும் நினைத்து நினைத்து மகிழ்ச்சித்தேனைச் சுவைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்க!

உண்மையாக சொல்லப் போனால் நானும் அம்மாதிரி துணிச்சலில்லாத வாலிபர்களில் ஒருவன்தான்! இதை உன்னிடம் கூறிக்கொள்ள வெட்கப்பட வேண்டியதொன்றுமில்லை என்று ஏதோ ஓர் தன்னுணர்வு கூறுகிறது.

சீலா! அதிகம் வளர்த்த நான் ஆசைப்படவில்லை. உன் பழக்கவழக்கங்கள்-ஏச்சுப்பேச்சுக்கள், நீ உணர்ந்தோ உணராமலே செய்த குறும்புகளும் உதவிகளும்-வேண்டுமென்றோ, எதேச்சையாகவோ கிளறிவிட்ட காதல் எண்ணங்களும் கிளர்ச்சிகளும்- தவறியோ தெரியாமலோ உனக்கு காதல் ஏற்பட்டோ, பிறருக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தோ நீ அடித்த சரசங்களும் கொட்டமும் - என் நெஞ்சிலே பெரியதோர் புரட்சியை உண்டாக்கிவிட்ட வேகம் தான் இந்த கடிதத்தின் படைப்பு மர்மம். இன்னும் கூட நீ என்னை காதலிக்கிறாயா இல்லையா என்பது மயிரிழைப் பிரச்சினையாக

— 11-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

# எண்ணம்

~ கண்ணதாசன் ~

மலர் 4 || 26—10—57 || இதழ் 17

## இன்னுமா, தமிழா?

ஆங்கிலர்கள் போனார்கள்; சுதந்தி ரத்தில்
அடியெடுத்து வைத்தோம்நாம்; இந்த நாட்டைத்
தாங்கிவிட வந்தார்கள், ஆண்டு தோறும்
'த்திங்கிணத்தோம்' போடுகிறார்; வாழ்க்கை முற்றும்
வீங்கியதல் லால்வேறு விளக்கங் காணோம்!
விலைவாசி தீயாகக் கருகிப் போனோம்!
ஓங்கிவளர் மேநாட்டைச் சுற்றிச் சுற்றி
ஓடுகிற பண்டிதரும் உணர்ந்தா ரில்லை!

செயற்கையிலே சந்திரனைச் செய்வார் நாட்டில்
செபமாலை உருட்டுகிற நாட்டின் வேந்தர்
இயற்கையிலே தனக்குள்ள நீள நாக்கை
இழுத்திழுத்துக் காட்டுகிறார்! ஆண்டு தோறும்
செயற்கரிய செயல்செய்யும் அமெரிக் காவில்
செத்தவர்கள் பிழைக்கின்றார்! அங்கும் சென்று
முயற்கொம்புப் பண்டிதர்தம் பெருமை பற்றி
முழநீளம் அளக்கின்றார்; திரும்பு கின்றார்!

ஆளின்றிப் பறக்கின்ற விமானம் அங்கே!
அலுங்காமல் செல்கின்ற ஊர்தி அங்கே!
ஆளுள்ள விமானங்கள் விழுவ திங்கே!
ஆட்கொல்லி ஊர்திபல ஊர்வ திங்கே!
நீள்கின்ற நாக்கன்றி ஏது மில்லா
நெய்வெட்டிப் பண்டிதரோ அங்கே சென்று
தோள்தட்டிப் பாடுகிறார்! நிதியைத் தாங்கும்
சூரரெனில் கடன்வாங்க ஓடு கின்றார்!

இந்நாட்டில் செய்கின்ற சவரக் கத்தி
எழில்முகத்தைக் கிழமுகமாய் ஆக்கிக் காட்டும்!
இந்நாட்டில் செய்கின்ற காகி தத்தில்
எழுதுபவன் எழுத்துத்தான் தலையெ ழுத்து!
இந்நாட்டில் செய்கின்ற எழுது கோலை
என்னென்பேன்! ஏரென்பேன்! உழுதும் பார்ப்பேன்!
இந்நாட்டில் செய்கின்ற வாக னத்தில்
ஏறுபவன் குடும்பத்தார்க்(கு) அனுதா பங்கள்!

விஞ்ஞானத் துறையினிலே வளர்ச்சி உண்டா?
வீரமிகும் படைகள்தான் நம்பா லுண்டா?
அஞ்ஞானப் பிண்டம்போல் "ராசன் பாபு"
அந்தணர்கள் கால்கழுவிக் குடித்துப் பார்த்து
மெஞ்ஞானம் காண்கின்றார்! மக்கள் ஆட்சி
வேடத்தைப் பேடிமையைப் படைத்த தல்லால்
எஞ்ஞானம் ஆக்கிறோம்? தமிழா நீசொல்!
எந்நாட்டில் இதுபோலும் மடமை காண்போம்!

முட்டாள்கள் கூட்டத்தார் ஆள வந்தார்
முந்நான்கு வருடங்கள் போன பின்பும்
கெட்டோமே! ஆடைக்கும் நிழலி னுக்கும்
கிள்ளுகிற பசிதீர்க்கும் உணவி னுக்கும்
கொட்டாவி விட்டோமே! விடுகின் றோமே!
குறையாத வறுமைக்கே ஆளா னோமே!
பட்டாயே தமிழா! இம் மடையர் ஆளும்
'பாரத'த்தின் ஒற்றுமையா இன்னும் கேட்பாய்?

## தவம் பலித்தது!

தொட்டனைத்தூறும் மணற்கேணியும் கொட்டி வைத்த பிண்ணுக்கு குவியல்போல் கட்டி முடித்த ஒரு கோவிலும், அந்திப் போதில் தங்க முலாம் பூசிக் கொண்டு ஓடுகின்ற ஆறும் கொண்ட ஊர்! திருமறைக்காடு என்று அதற்குப் பெயர்.

உடுக்கை போன்ற தன் இடுப்பிலே, குடம் தூக்கி, 'வலக் கையை, இப்படியும், அப்படியும் அசைத்து' குடி நீர் எடுக்க அவள் வந்தாள், ஆற்றுக்கு.

அங்கே நீர் குடித்துக்கொண்டிருந்தான் 'அவன்'! தண்ணீரை எடுப்பதுபோல், அந்தத் 'தாக விடாத் தலைவனின்' நெஞ்சத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டு நடந்தாள்.

'நில்' என்றான் அவன். பல்லை, முல்லையென்று சொல்லும்வண்ணம் "கொல்" என்று சிரித்து, கோபுரத்தின்கீழ் வந்து நில் லென்றாள்.

'நாராயணன்' நீண்டு படுத்திருக்கும் ஆலயத்துக்கு நாள் தவறாமல் அவன் வந்து நின்றான். பாராயணம் ஒப்புவிக்கும் பக்தன்போல், அங்கே வருவார் போவாரையெல்லாம் 'அவளை' பார்த்தீர்களா? என்று கேட்டான். அவளா? அவள் பெயர் என்ன? அவள் ஊர் என்ன? பேரென்ன? அவனுக்கே தெரியாதே. அதற்கப்புறம் 'அவன்' அங்கு போவதே இல்லை.

வில்லெடுத்து காட்டுக்கு விரைந்துவிட்டான் 'அண்ணன்'- இனி விடுதலைதான் என அவள் விரைந்தோடி வந்தாள் ஆலயத்துக்கு விழியால் மொழி பேசிய வனை அடைவதற்கு. 'தெய்வம்' இல்லா தேவாலயம்போல், அந்தத் திருமாறன் இல்லாதிருக்கக் கண்டாள்.

'நில்' என்று சொல்லி, 'காமனுக்கு மீது கண்காட்டி'கோபுரக் கீழ் தேடி வந்தால், என்னைக் கொல்லென்று சொன்னீர்? காதலால் புயன் மாற்றிப் போட்டு, என்னை கண்ணீரோடு கிடக்கவா செய்தீர்? நிலவு இங்கே! நீல வானமே! நீ எங்கே? என்று நெஞ்சத்தால் அழுதாள், நடந்தாள்.

கற்றவர் நெஞ்சம்போல் களங்கமில்லாமல், குளத்து நீர் இருந்தது. பெற்ற காதல் துன்பத்தோடு, சற்று இளைப்பாற அங்கு வந்தாள். தோழியும் துணை வந்தாள். தோழிக்கு நெடு நாளாக ஒரு ஆசை! தூய மதிபோலும் முகமுடைய தன் தலைவியின் முகத்திற்கு ஒரு தனி உவமை சொல்ல வேண்டுமென்று.

தடாகத்தில் நிற்கின்ற தாமரையைப் பார்த்தாள்! தோழி அவள் தமிழ்ப்பெண், கற்பனை புரண்டது.

"அம்மா!" என்றாள்.

"ம் ம்..." என்றாள் தலைவி.

குளிர்ந்த நீர் நிரம்பிய இக் குளத்தில் - வண்டுகள் கூடி மொய்க்கும் அதோ தாமரை மலர்கள். ஒற்றைக்காலால் நின்று, ஓங்கித் தவம் செய்த காரணத்தால் இன்று ஒரு வரம் பெற்றதம்மா! தாமரை என்றாள்.

"என்ன வரம்?"

உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உன் முகத்தைப்போல் திருவும், உருவும் பெற்றது! இன்றுதான் பெற்றது!! என்றாள்.

"தண்துறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு
புண்டரிகம் நின்வதனம் போன்றதால்-உண்டோ
பயின்றார் உளம்பருகும் பண்மொழியாய் பார்மேல்
முயன்றால் முடியாப் பொருள்!
—பழம் பாடல்.

-கோ. இறைமுடிமணி

வெளிவந்து விட்டது!
தோழர் டி. கே. சீனிவாசன் எழுதிய
குறள் கொடுத்த குரல்
— விலை ரூ. 1 —
உங்கள் தேவைக்கு:
சாந்தி நூலகம்,
2/122, பிராட்வே,
சென்னை-1.



# இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி

பிரிவினையை எதிர்க்கிறீர்களா? இந்தக் கட்டுரையைப் படியுங்கள்!

- 5 -

**உலகமெல்லாம் ஒன்ருக ஆகி வரும்போது, ஏனப்பா நீ பிரிவினை முழக்கம் செய்கிருய்? 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே, என்ற பாரதிப் பாட்டை நீ அறியமாட்டாயா?**

*—இது பாரத தேசியத்தின் பரத ட்டியக் குரல், உலக வேதாந்தக் ரல், வெள்ளையர் கற்றுக்கொடுத்த காதிபத்தியக் கரத்தை உள்ளே ளித்துக் காட்டும் பசப்புக் குரல்.*

**ஒற்றுமைக்குப் பதில் பிரிவி னயா? ஐயோ, தேசத்தைத் ண்டாடலாமா? கூறுபடுத்த ாமா?**

*இது துண்டாடப்பட்ட அரசியல் ிச்சை பெற்றவர்கள் சுதந்தர தேசியவாதிகளை நோக்கி அலறும் அலறல்.*

**ஆரியமாவது, திராவிடமாவது! அதெல்லாம் மலையேறிவிட்ட காலம். இனவேறுபாட்டை இந்த இருபதாம் நூற்ருண்டிலும் யாராவது கிளப்புவார்களா? யார் ஆரியர், யார் திராவிடர்? எல்லாம் ஒன்றுபட்டு ஒரே பாரதமாக உன் கண்களுக்கு விளங்கவில்லையா?**

*இது இனமற்ற தேசியம் பேசும் இனவேறுபாட்டுக்காரர் தாம் உட்கொண்ட அபினியை மற்றவருக்கும் முதலில் இலவசமாக ஊட்ட வரும் அன்புக் கிதம்.*

**திராவிடமா? அது என்ன மொழிச்சொல்? தனித்தமிழ்ச் சொல்லா? சமஸ்கிருதச் சொல்லாயிற்றே! இலக்கியத்தில் அதற்கு வழக்கு உண்டா? வடவர் சொல்லையா தமிழர் வழங்குவது!**

*தனித்தமிழை வெறுப்பவர் மேற்கொள்ளும் தனித்தமிழ் வாதம், வடவரை எதிர்த்துப் பேசும் வடவர் கங்காணிகளின் நயவஞ்சகக் குரல் இது!*

**திராவிடம்! வெள்ளைக்காரன் உபயோகித்த, உற்பத்தி செய்த பெயராயிற்றே!**

*வெள்ளையன் உருவாக்கிய பாரத தேசியத்தை-அவன் பிரித்த பிரிவினையை-தம் முன்னோர் வழிவழிச் சொத்தாகக் கொண்டவர் கேட்கும் மடமை வினு இது.*

**திராவிடம்! ஆரியப் பகைவன் நம் இனத்தை இழிவாகக் கருதி வசை பாடி அளித்த பெயரையா நாம் ஏற்பது! 'ஓடிவந்தவர்,' 'திருடர்', 'திராவைகள்', 'பஞ்சைகள்' என்றல்லவா சமஸ்கிருதத்தில் அதற்குப் பொருள்? அந்தச் சொல்லைக் காதால் கேட்டாலே கர்ணகடூரமாய் இருக்கிறதே!**

*இது, பகைவன் என்று ஆரியரைக் கூறிக் கொண்டே ஆரியர் பக்கமாக நின்று வயிறு வளர்க்கும் விபீஷணுழ்வார்கள் பேச்சு. தனித் தமிழின் உயிர் எதுவென்று அறியாத சில தனித்தமிழ்ப் பசப்பர்களை அறிவு மடமையால் ஏய்க்கும் கிளிப்பிள்ளை குரல் இது!*

**தமிழன் என்று தன் தாய் மொழிப் பெயரைச் சொல்லு, தமிழ்நாடு என்று சொல்லு. ஐக்கிய தமிழகம் என்று கூறு. அதுதான் மொழிசார்ந்த தேசியம். திராவிடம் ஒரு தேசியம் ஆகுமா?**

*பாரத தேசியத்தை எதிர்ப்பவரையே தமிழ்ப்பற்று மூலம் தமிழருக்கெதிராகத் தூண்டிவிடும் நச்சுப் பாம்பின் நெளிவு குழைவு இது.*

**பாரதம் எவ்வளவு பரந்த தேசம்? பரந்த மனப்பான்மையுடன் அதை ஏற்று ஒற்றுமை வளர்த்தால் உலகில் மதிப்புப் பெறலாமே? திராவிடம் என்று ஏன் குலுக்குகிருய்? அத்தகைய சிறு பரப்பு உலகில் வலிமையுடன் வாழமுடியுமா?**

*திராவிடம் தனித்து வாழமுடியுமா?*

*வடக்கு, தெற்கு, என்று ஏன் திசை வேறுபாடு கொள்கிருய்? இது ஏகாதிபத்தியத்தின் அரசியல் சூழ்ச்சிக் குரல். பேராசைப் பேயின் அலறல் பேச்சு!*

*உலகளாவிய மனிதஇனப் பாசம் பேசும் மனிதஇனக் கங்காணிகள், இமயமளாவிய கதம்ப தேசியம் பேசும் கீழ்திசைத் தேசிய விபீஷணர்கள், இமயத்திலிருந்து தொங்கிக் கொண்டு தமிழ்ப்பற்றுடையார் போல் நடிக்கும் ஐந்தாம் படை ஒற்றர்கள், ஏகாதிபத்தியதாசர்கள், தில்லியின் தத்துப்பிள்ளைகளான இளையாழ்வார்கள் கேட்கும் கேள்விகள் இவை.*

*அடிமைத்தனத்திலும் தெரியாத்தனத்திலும் சூழ்ச்சிமுறையிலுமே இக்கேள்விகள் திராவிட மக்களிடம் கேட்கப்பட்டாலும், திராவிடத் தலைவர்கள், திராவிட அறிவியக்க அறிஞர்கள் இவற்றுக்கு உவகையுடன் பதில்கூற முன்வருகிருர்கள். ஏனெனில் இன்னும்-இந்த இருபதாம் நூற்ருண்டிலும் கூட – நூற்றுக்கு ஓரிருவர்கூடக் கல்விபெருத நிலையில் வைக்கப்பட்டிருக்கும் நம் திராவிட மக்களிடையே அரசியலறிவை, கல்வியின்பத்தை, தன்னின வரலாற்றறிவை, இனப் பண்பாட்டறிவைப் பாய் இக்கேள்விகள் பயன்படுபவை ஆகும். அவற்றின் விளக்கங்கள் வருங்காலத் திராவிடத்தின் அறிவுக்கோயில்களைக் கட்டமைப்பதற்கான தூண்டுதல் தருபவை ஆகும்.*

*இவற்றுக்கான விளக்கம் கூறுவதன் நோக்கம் கேட்பவர்களுக்குப் பதில் கூறுவதற்காக மட்டுமல்ல. அதைவிடப் பயனுடையது மக்களுக்குத் தரப்படும் அறிவு விளக்கம். இன்னும் நிலையான பயனுடையது விளக்கத்தின் பின்னணியில் இருந்துகொண்டு திராவிட மறுமலர்ச்சி இளைஞர், நன்மையை உருவாக்க இருக்கும் வருங்காலத் திராவிட வாழ்வின் அருங்கலச் செல்வம், திராவிடர் புது மன்றத் திட்டம்!*

*இவ்விளக்கம் கேட்டபின்னும் கேள்வி கேட்டவர் மீண்டும் மீண்டும் கேட்கலாம். கேட்ட கேள்வியையே கேட்கலாம். அதனுலென்ன? கேட்டவர் தாமே பதில் கூறும் வரை, திராவிட அறிவுப் படையில் முன்னணிவீரராகும் வரை நாம் புதிது புதிதாகப் பதில் கூறிக் கொண்டே இருக்கும் பண்புவளம், அறிவுவளம், மொழிவளம் கொண்டவர்கள்தான். சிறு விளக்கமே வருங்கால திராவிடத்தின் புதுமலை கண்ட, ஆறுகளாக, கடல்களாக குவிந்து வழியும்வரை பதில் கூறிக் கொண்டே இருக்க நாம் தயங்க மாட்டோம்.*

*இவற்றுக்கான விளக்கம் ஒரு சொற்பொழிவாக வெளிவரலாம். ஒரு கட்டுரையாக எழுதப்படலாம். ஒரு ஏடாக, பல ஏடுகளாகப் பெருகலாம். ஒரு முழு இலக்கியமாக, இயல், கலைத்துறையாக, பல இலக்கியங்களாக, பல கலை இயல் துறைகளாக வளரலாம். ஆனுல் கேள்விகள் மழையாக, சோனுமாரியாக திரும்பத் திரும்பக் கேட்கப்படுந்தோறும், விளக்கங்கள் வளர்ந்து கொண்டே செல்லும். சொல் விளக்கங்களாக அவை நிற்கப் போவதில்லை. திராவிடநாட்டைப் பெற்றே தீரும். அரசியல் விளக்கத்தால்மட்டும் கூட அவை நிற்கப் போவதில்லை. இன்றைய உலகம் கண்டு பெருமிதத்துடன் பாராட்டும் முறையில், அத்திராவிடத்தை உலகுக்கு ஒரு முன்மாதிரி நாடாக ஆக்கி, ரஷ்யாவுக்கு ஒரு ரஷ்யாவாக அது உலகைப் புதுவாழ்வுக்கு இட்டுச் சென்று புது உலகும் படைத்துக் காட்டி, அதில் உலக முழுவதின் ஒத்துழைப்பையும் பெறும்வரை இந்த விளக்கங்கள் நிற்கப்போவதில்லை. சொல்விளக்கம், வரலாற்று விளக்கம், அறிவு விளக்கம், பண்பாட்டு விளக்கம், செயல்விளக்கம், வாழ்வு விளக்கம் என அத்தனை விளக்கங்களையும் தரவல்ல இளைஞர் நலபடையர், அறிவு பட்டாளம், செயல் வீரர் வரிசை, கலைஞர் குழாம்கள் நம் பின்னே சடை வரிசையில், சங்கிலி வரிசையில் அணி அணியாக நின்று துடி துடித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். உலகம் விரைவில் அறிய இருக்கிறது! வருங்கால உலகம் அதனுல் வளம் பெற இருக்கிறது.*

*திராவிட இயக்கம் திராவிடத்தின் மொத்தமட்டுமல்ல, வருங்கால உலகிற்குக் கிடைக்க இருக்கும் பெரும் புத்தயல்.*

*'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பொதுவரசாகி, ஒருலகத்துக்கே உரிய ஒரு முதற் படியாய் இருக்கும் போது, நீ ஏனப்பா சுயராஜ்யம், பூரண சுதந்தரம் வேண்டுமென்கிருய்?' என்று பழய ஏகாதிபத்தியம் கேட்டது, இந்திய விடுதலை இயக்கத்தாரிடம். பூரண சுதந்தரம், முழு நிறை விடுதலைக்குப் பதில், ஏகாதிபத்தியப் புத்துருவான பொதுவரசில் ஒரு உருப்பாக இருக்கும் அரும் பெரும் பேறுபோதும்; அதற்காக மன்னரை இணைப்புக் குறியாக ஏற்கும் ஒரு புது வகைக் குடியரசாகக்கூட நான் வேசம் போடுகிறேன்—என்று நெருங்கிய குட்டி ஏகாதிபத்தியம் இப்போது உண்மைத் தேசியவாதிகளை, திராவிட உயர்த் தேசிய வாதிகளைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்கிறது.*

*அந்தோ, காலந்தான் மாறிவிட்டது. பண்பு மாறவில்லை. நிலைமை மாறவில்லை. பாம்பு மடியவில்லை. சட்டை மாற்றிக்கொண்டு புத்துருவில், புதிய பளபளப்புடனும் புத்திளமையுடனும் சீறுகிறது!*

*ஒரே காலத்தில் ஒரே பாரதம் வேண்டுமென்று- துண்டுபட்டால் கூட மீந்த பாரதக் கூட்டுறவு போதுமென்று அதற்காகக் குட்டி ஏகாதிபத்தியத்தின் முன்னோர்கள் திராவிட இயக்கத்தவர்போலவே பாடுபட்டு விடுதலை தேடி அதை இந்த ஏகாதிபத்தியத்துக்கே பறிகொடுத்து விடுதலை வீரர்கள் கோரினுர்களோ, அதே காரணத்தைமுன்னிட்டு, ஆனுல் அந்தக்காரணத்தை விட மேலான வரலாற்று உயிர்த் தேசியத் துடிப்புடன், திராவிடரும் திராவிட இயக்கத்தவரும் திராவிட நாடு கோருகிருர்கள். ஆனுல்தில்லி ஏகாதிபத்தியம் பழைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் குரலில் ஒருலக வேதாந்தம் பசப்புகிறது.*

*ஒருலகம், ஒரு மனித இனம் எனற கனவு இன்றைய உலகின் கனவு, ஆனுல் ஒருலக நூற்ருண்டுகளுக்குமுன் தமிழ், தமிழகம், தமிழிலக்கியம் நீங்கலான எந்த நாடும் மொழியும் இலக்கியமும் அதை அறியாது. பாரதப் புதல்வர்களின் முன்னோர்களோ என்றும். ஒருலகமும் கனவு கண்டதில்லை. ஒரு*

— 9ம் பக்கம் —




## பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

**ஙளபதி, எமனேசுவரம்.**

**(அ) இராமகுலப் புகழ்காக்க 'விழைந்த குன்றக்குடியார், 'சங்க கால அரசியலின் பழைய பண்பினும், கம்பர் கால அரசியல் சிறப்பான்றது' என்ற தேன் ?**

**(ஆ) 'அரசன் உடல், மக்கள் உயிர்' எனக் கம்பர் சங்கப் புலவர் கூற்றை மாற்றிக் கூறியுள்ளமையே அடியாரை அவ்வாறு பேசப்பண்ணியது-இதையும் ஆய்ந்து விடை தருக ?**

(அ) முழுப் புளுகை வாய்மையாக்கிப் பிரசாரம் செய்யும் ஆட்சியின் அறிஞரல்லர் குன்றக்குடியார் போன்றவர்கள். அவர்கள் அரைகுறைப் புளுகுகளை அரைகுறை உண்மைகளுடன் கலந்து, அவற்றைத் தம் தமிழறிவிலும் தமிழ்ப் பற்றின் பூச்சிலும் மூடிப் பொதிந்து நமக்கு மாத்திரையாகத் தரும் இனிய விடண மருத்துவர்கள்.

சங்க கால அரசியலின் **பழைய பண்பு**—ஆம், பழய பண்பு, இதில் உண்மை சொலிக்கின்றது. இதற்கு எதிராகச் சிறப்பான்றது எது ? கம்பர் கால அரசியல் ! கம்பர் கால அரசியலின் 'புதிய பண்பு' அன்று. அவர் கூற்றுக்கு மறுப்பு அவர் கூற்றிலேயே உள்ளது, பொதிந்துள்ளது. மெய்மையையே கூறிப் பொய்மைத் தோற்றம் அளிக்கும் குன்றக்குடியாரின் திறமையே திறமை !

இன்னும் ஒன்று. குன்றக்குடியார் தமிழக வரலாற்றையும் சிறிது நுணுகிக் கண்டுள்ளார். கம்பர் கால அரசியல் என்றார், சோழர் கால அரசியல் என்று கூற நாக்கெழவில்லை. சோழர்கள் வளர்ச்சிப் படியில் இருந்த காலத்தில், வளர்ந்து உச்சப்படிப்பில் வாழ்ந்த காலத்தில் இருந்த கலைஞர் அல்லர் கம்பர். அவர்கள் பெரும் பேரரசு பேரரசாய்ச் சுருங்கி, படிப்படியாக ஆற்றலிழந்து தகர்ந்து விழத் தொடங்கிய காலத்துக் கவிஞர் அவர். ஒருவேளை அவர் கம்பராமாயணப்படி தமிழுக்கு எதிரான பண்பை ஊக்கியிராவிட்டால், மூவருலாவும் கலிங்கத்துப பரணியும் புகழடையவிட்டிருந்தால், ஒருவேளை சோழப் பேரரசு அவ்வளவு விரைந்து சரிந்திருக்காது. தமிழகம் மீட்டும் பேரரச வாழ்வு பெற்றிருக்கும். இதையும் அடிகளாரின் வரலாற்றுணர்வு ஒருவேளை மோப்பம் பிடித்திருக்கக்கூடும். 'கம்பர் கால அரசியல்' என்ற அவர் சமத்காரமான முரண் தொடர் இதனைக் காட்டுகிறது.

சங்க கால அரசியலின் பழய பண்பு குடியாட்சிப் பண்பு. அது கேவலம் கம்பர் கால அரசியலின் புதுப் பண்பைவிட மட்டுமல்ல, சோழர் காலப் புதுமைப் பண்பைவிடக்கூட உயர்ந்ததே. ஏனெனில் சோழர் காலத்தில் ஆட்சிதான் உயர்ந்தது, குடிகள் தாழ்ந்தனர், மடமையுள் ஆழ்ந்தனர். சோழ மன்னர் வீரம் வளர்ந்தது, பேரரசின் எல்லை கடல் தாண்டி ஆசியா வெங்கும் பரந்தது. ஆனால் மக்கள் மெல்ல மெல்ல 'அடிமைச் சேற்றில் இறங்கி வந்தனர். ஆட்சித் திறம் சிறந்தது; ஆனால் மக்கட் பண்புத் திறம் குறைந்தது.

கம்பர் காலம் சோழர் பண்பும் சரியத் தொடங்கிய, சரிந்து வந்த காலம்.

சோழப் பேரரசர்களுக்குப் பின் அவர்களை வீழ்த்திப் பேரரசாண்ட பாண்டியர் சோழப் பேரரசர்களை விட வீரத்தில் ஒரு சிறிதும் குறைந்தவரல்லர். ஆனால் அவர்கள் வீரம் அச்சம் ஊட்டியது. தமிழர் என்றால் வடவர்மட்டுமன்றி மேலை ஆசியாவின் படை வீரர் யாவரும் நடுங்கினர். ஆனால் அவர்கள் ஆட்சி தமிழர் புகழாட்சியாய் மலரவில்லை. ஏதனால், கம்பர் ஊட்டிய பண்பினால் தமிழகம் அடைந்த கேடு அது. அதுமட்டுமோ ? சோழர்களைவிடப் பாண்டியர்கள் செல்வத்தில், பக்தியில் குறைந்தவர்களல்ல. அவர்கள் சிற்பங்கள் அதைக் காட்டுகிறது. சைவ மடங்கள், சித்தாந்த சாத்திரங்கள் வகுத்தவர்கள் அவர்களே. ஆனால் சோழர் காலத்தில் ஆட்சிக்குச் சிறப்பளித்தன கலைக் கோயில்கள், பாண்டியர் காலத்தில் கோயில்கள். நாட்டுச் செலவம் பாழாக்கி, அயலார்படையெடுப்பை வரவழைத்து நாட்டைப் பாழாக்கின. கம்பர் கால அரசியல் பண்பின் மரபுச் செல்வம் இந்த அழிவு. மக்கள் வீரம் பட்டுப்போன சோழர் வாழ்வில், அரசர் பண்பு கெடுத்து அரசர் வீரமும் அழிக்க உதவிய பண்புதான் கம்பர் பண்பு, கம்பர் காலப் பண்பு !

(ஆ) சங்க கால அரசர் குடியாட்சிப் பண்பில் வளர்ந்த அரசர். மக்கள் உயிராக அவர்கள் இயங்கினர். மக்களுக்காக வாழ்ந்தார்கள். சோழப் பேரரசர் காலத்தில் குடியாட்சிப் பண்பு கவிழ்ந்தது. ஆனால் மன்னர் பின்னும் தமிழ்ப் பண்பில் ஊறியிருந்தனர். கம்பர் காலத்தில், அதாவது சோழர் நலிவுக் காலத்தில், மன்னர் தமிழிலக்கியம் பேணினர். ஆனால் தமிழ்ப் பண்பிழந்து கம்ப ராமாயணம்போன்ற தமிழ்ப் பண்பு குன்றிய இலக்கியமே பேணினர். வீரமிழந்து, பண்பிழந்துநின்ற அவ்வரசர் மக்களை உயிராகக் கொண்டு அவர்கள் உதவியால் சிறிது காலம் வாழ எண்ணியவர்கள். உண்மையில் இக்காலச் சோழப் பேரரசரில் பலர் பேரரச மதிப்பைக் காப்பாற்றத் தம் உறவினரான கன்னட நாட்டு மன்னர் ஹொயசனர்கையையும் வலிமை வாய்ந்த தெலுங்கு நாட்டுச் சோழச் சிற்றரசரான சோட மரபினரையும் பிற உள்நாட்டுப் பெரு மக்களையும் துணையாகக் கொண்டு வாழ்ந்தவரே. 'அரசன் உடல், மக்கள் உயிர்' என்ற கம்பர் கவிதைக் கற்பனையில் வரலாற்றுணர்வுகொண்ட அடிகள் இப்பண்புகளை நுண்ணோரில் கண்டுள்ள தகைமை போற்றற்குரியதே !

★

**ஙன்மாறன், சென்னை-10.**

**'சிலப்பதிகாரம் இன்பியலா அல்லது துன்பியலா ?**

இன்பியல், துன்பியல் என்ற பெயர்கள் இவற்றின் உயிர் வேறுபாடு மறைந்த இடைக்கால பிற்காலத்துக்குரிய கருத்து மொழி பெயர்ப்புக்கள். வாழ்வியல், வீறியல் என்பன கிரேக்கரும் பழந் தமிழரும் (மலையாளிகளும்) வழங்கிய சொற்களின் (**Tragedy**- சாக்கையர் கூத்து; **Comedy** ஒட்டந் துள்ளல்) சரியான கருத்துப் பெயர்ப்புக்கள் ஆகும். முன்னது வீர வழிபாட்டிற் பிறந்து, பின்னர் வீர தெய்வங்களையும் வீரர்களையும்பற்றிய நாடகமாக வீரமன்றம் அதாவது கோயில்களில் ஆடப்பட்டது. அதற்குரிய வேடம், ஆடை யணிமணி, சொல் நடை (கவிதை மிகுதி) சுவை (வீரம், வீறு, சோகம் மிகுதி) ஆகியவை அவை இன்றுபோல் நாடகத்தில் ஒருவகை ஆக்காமல், முற்றிலும் ஒரு தனிக் கலையாக அதை பண்டு ஆக்கியிருந்தது. மேலை உலகில் வீறு நாடகமும் வாழ்வியல் நாடகமும் ஒரே நாடகமாகக் கருதப்பட்டது பிற்காலத்திலேயே.

தமிழர் வீரமன்றம் கோயில். அது ஒரு ஊர்ப் பொது வெளியின் நடுவில் அமைந்திருந்தது. வீறுநாடகம் மன்றத்தினுள் ஆடப்பட்டது. வாழ்வியல் நாடகம் மன்றத்துக்கு வெளிதுய, அம்பலத்தில் ஆடப்பட்டது. ஆகவே வீறு நாடகத்தை அரங்காட்டம் என்றும், வாழ்வியல் நாடகத்தை அம்பல ஆட்டம் என்றும் கூறலாம்.

வீறு நாடகத்தில் துன்ப மிகுதியாயிருப்பதால், அதனைப் பின்னாட்களில் மக்கள் துன்பியல் என்றும், வாழ்வியல் நாடகத்தில் இன்பமோ, நகைச் சுவையோ, களியாட்டமோ, வசையோ மிகுதியாகத் தொடங்கியதனால் அது இன்ப நாடகம், நகை நாடகம், களி நாடகம், வசை நாடகம் எனப் பலவகைப்பட்டன.

சிலப்பதிகாரம் உண்மையில் ஒரு சாக்கையர் கூத்தாகவே இளங்கோவடிகளால் வீர வணக்கத்துக்குரிய விழாப் பாடலாக இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று எண்ணுகிறேன். அது வீறு நாடகம் என்பதில் ஐயமில்லை. துன்பியல், இன்பியல் பாகுபாடு தோன்றியதற்கு முற்பட்ட காலத்ததாதலால், அதில் இன்பப் பகுதிகள் விலக்கப்படவில்லை. துன்பப் பகுதிகளும் இடம் பெறுகின்றன. ஆனால் முடிவு துன்பம் என்பதைவிட, வீறு என்பதே பொருத்தமானது.

முழு நிறை நாடகப் பண்பில் சற்றுக் குறைந்ததாயினும், வீறுணர்வில் இன்னும் சற்று உயர்ந்த வீறியல் நாடகக் காப்பியமே மணிமேகலை. ★

ஏஜண்டுத் தோழர்கள் கவனத்திற்கு—

9-11-57ம் தேதி இதழிலிருந்து

அத்திப் பழம்

மா. கி. தசரதன், எம். ஏ.

எழுதும்

அற்புதத் தொடர்கதை ஆரம்பமாகிறது !

தேவையான அதிகப் பிரதிகளுக்கு தகுந்த முன்பணத்துடன் முன்கூட்டியே தெரிவிக்கவும். முன்பணமின்றி கண்டிப்பாய் அதிகப் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

நிர்வாகி,
"தென்றல்"

# நன்னூல் நன்னூலல்ல!

தேவநேயப்பாவாணர் அவர்கள் 'நன்னூல் நன்னூலா?' என்று கேட்டார். வித்வான் எஸ். பி. கெம்பீர நைனர் அவர்கள் அதை மறுத்து 'நன்னூல் நன்னூலே' என்றார். இந்த இதழில் பன்மொழிப் புலவர் அவர்கள் 'நன்னூல் நன்னூலல்ல' என்று கூறி பாவாணரை ஆதரிக்கிறார். [ஆ-ர்.]

புலமை, அறிவு ஆகிய சொற்கள் ஒரு பொருட் சொற்களாகப் பலரால், புலவரால்கூட வழங்கப்பெறுகின்றன. பொதுமக்களில் பலர் புலவர், அறிஞர், கலைஞர் ஆகிய மூன்று சொற்களைக் கூடச் சில சமயம் வேறுபாடு கருதாது வழங்குவதுண்டு. ஆனால் புலமை, அறிவு, கலை ஆகிய சொற்கள் ஒரு பொருள் சொற்களல்ல. புலவர், அறிஞர், கலைஞர் என்ற சொற்களை எப்படியோ அறிவியக்க கலையின் ஆற்றலால் இன்று தமிழகம் சரியாகவே பயன்படுத்தத் தொடங்கிவிட்டது என்னலாம். தமிழ்ப் புலவரைப் புலவர் என்றும், அறிஞர் அண்ணா போன்ற அரசியல் சிந்தனையாளர், தேவநேயப்பாவணர் போன்ற மொழிபற்றிய சிந்தனையாளர்களை அறிஞர் என்றும், கலைவாணர் என். எஸ். கே. போன்றவர்களைக் கலைஞர் என்றும பொதுமக்களே இன்று வழங்கும் வழக்குப் புலவர்கள் கண்டு நுணுகி யுணர்ந்து மகிழத்தக்க ஒன்றாகும்.

புலவர் ஒருவருக்கொருவர் கருத்து மாறுபடுவது இயல்பு. அம்மாறுபாட்டை எடுத்துரைக்கும் உரிமை, கடமை அவர்களுக்கு உண்டு. அத்தகைய மாறுபாடு, வாத எதிர்வாதம் சொற் போராட்டம்கூட மிகப் பல தமிழகத்தில் நிகழ்த்ததுண்டு. அவற்றில் வெற்றி தோல்விகள் யாருக்காயினும், எவரும் என்றும் வெற்றி தோல்விகள் காணாத இடத்தும், தமிழகம் அவற்றால் பெரிதும் பயன் அடைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. 'அங்ஙனம்' சரியா, 'அங்கனம்' சரியா; பொருனை சரியா, பொருளை, பொருநல், பொருந்தம் சரியா என்பன போன்ற பழய தலைமுறைப் போராட்டங்கள் 'தென்ற'லில் புத்துயிர் பெற்று அறிவுக்கிளை பரப்பி வருவதும் பலர் அறிந்ததே. பேராசிரியர் முனைவர் வரதராசனார் போன்ற தமிழ்ப் புலவர்கள் அத்தகைய ஆராய்ச்சிகளில் சிலவற்றைச் 'செந்தமிழ்ச் செல்வி' போன்ற புலமைத் தாள்களிலும் தனி ஏடுகளிலும் அழகுக்கலை நயம்படக் கட்டுரைகளாக்கித் தந்ததும் தமிழகம் அறியாதது அல்ல.

அறிஞரும் இதுபோல் ஒருவருக்கு ஒருவர் மாறுபடுவதுண்டு. இங்கும் வெற்றி தோல்விகள் முக்கியமல்ல. வெற்றியடைந்தவரே பேரறிஞராயிருந்து தீரவேண்டுமென்றுமில்லை. பல பேரறிஞர் தவறான பாதத்தை எப்படியோ வழக்கறிஞர்போல மேற்கொண்டதுண்டு. சின்னஞ்சிறுவர் தற்செயலாகச் சரியான வாதமேற்கொண்டு சிறு வெற்றி காண்பதுமுண்டு. புலவர் புலமை ஆராய்ச்சிபோலவே, அதனை விடப் புதுவதான மகிழ்வும் பயனும் ஊட்டவல்லது இவ்வறிவாராய்ச்சி.

ஆனால் புலமை வேறு, அறிவு வேறு, கலை வேறு, புலமையாராய்ச்சி வேறு, அறிவாராய்ச்சி வேறு, கலையாராய்ச்சி வேறு.

புலமை, புலம், புலன் ஆகியவற்றுடன் தொடர்புடையது. ஐம்புலங்களாலும் காணும் அறிவுபோல, கட்புலனால் படித்தறியும் அறிவும் வாங்கிக்கொள்ளும் அறிவே. புலமை, புலமை ஆராய்ச்சிகூட இந்த நிலையிலிருந்து சற்றேதான் உயரும். மொழியின் பல நூல்களை, பண்டை அறிஞர்கள் இயற்றிய

**- பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை M.A., L.T -**

பல உரைகளை ஒப்பிட்டு உயர்வு தாழ்வு, ஒற்றுமை வேற்றுமை காணும் பெற்றியிலேயே பெரும் புலவர் உயர்வுறுகின்றனர். பல மொழிகளின் ஒப்புமை காணும் புலவர் இன்னும் உயர்வு அடைய இயலும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் அறிவு, அறிவாராய்ச்சி இவையல்ல. நூல் படியாதவன் கூட அறிஞனாகலாம். திராவிட இயக்கத்தவருக்கு அதன் எல்லறு மழியாச் சின்னமாகப் பெரியார் ஈ. வே. ராமசாமி விளங்குகிறார். காந்தியடிகள் ஒரு மகாத்மா. ஆனால் பெரியார் ஓர் அறிஞர். அவர் அறிவு புலமையற்ற அறிவு. அறிஞர் அண்ணா அறிஞா, புலமையோடு, கலையோடு இணைந்த முழு அறிஞர். தமிழக மட்டுமல்ல, உலகம் அரிதே காண்கிற முழு அறிஞர். மேலும் அறிவு என்பது நுணுகியாராயும் நுண்முக அறிவு, பரந்து ஆராயும் அகன்ற அறிவு, இசைவித்தாராயும் அறிவு, வேறுபடுத்தி ஆராயும் அறிவு, பழமை படித்தாராயும் அறிவு, புதுமை விரித்துக் காணும் புத்தாக்க அறிவுலகச் சிந்தனையின் பல படிகளிலே செல்லும். அறிவின் வகைதொகையும் மாண்பும் பெரிது. அது புலமையன்று, புலமை கடந்த சிந்தனைச் செல்வம். நூல்கள் அதற்கு உதவலாம். ஆனால் அது நூல்கள் தரும் செல்வம் அல்ல. மனவளம் தரும் செல்வம், மனவளத்தின் உயிருவிட்டம் அளிக்கும் புதுவளம், ஆக்க வளம் அது!

கலை புலமையிலும் மேம்பட்டது; உண்மைக்கலை அறிவினும் கூட மிக மிக அரிது. புலமைக் கலையைத்தான் இன்று உலகில் புலவரும் கலை என்று கருதுகின்றனர். உண்மைக்கலை சொல் கடந்தது. சொல் ஆக்குவது. உண்மை இசை பண் கடந்தது. பண் ஆக்குவது. இதைத் தமிழர் மட்டுமன்றி, உலகம் கூட இன்னும் பெரிது காணாததாலேயே சங்க இலக்கியமும் சிலம்பு மேகலைகளும் திருக்குறளும் கம்பராமாயணங்களுடனும் பிறமொழி இலக்கியங்களுடனும் சேரவைத்தெண்ணப்படுகின்றன. கலையின் சிறப்புக்குத் தமிழகத்திலே புலமை கடந்து கலைச் சிகரத்தை எட்டிப் பிடித்த புலமைக் கலைஞரான பேராசிரியர் வரதராசனாரையும், புலமை அறிவு இரண்டும் நிரம்பி அவை கடந்து கலைச் சிகரத்தை எட்டிப் பிடித்தும் மக்கள் பணியில் இறங்கிவிட்ட காரணத்தால் முழுதும் தன்னொளி காட்டாதிருக்கும் கலை அறிஞர் சி. என். ஏயையும் சான்றுகளாகக் கூறலாம்.

பேரறிஞர் தேவநேயப்பாவாணர் புலவர்களில் ஒரு புலவர். ஆனால் அவர் சிறப்பு இதுவல்ல. அவர் மொழித்துறையில் கிட்டத்தட்டத் தமிழகம் பெற்றெடுத்த ஒரே ஒரு அறிஞர் என்று கூறத்தக்கவராயுள்ளார். அவருடன் பக்கத்திலோ, சற்றுத் தொலைவிலோ வைத்து ஒப்பிட, எண்ணக்கூடத் தமிழகம் மொழித்துறையிலே இன்னும் ஓர் அறிஞனைப் பெற்றுத் தரவில்லை. தாமரை வளர்வதற்கு இடந்தரும் சேறுபோல அவர் பணிக்குரிய களங்களாக அமைந்திருக்கும் நம் கல்லூரி பல்கலைக் கழகங்கள்கூட அணிமைக் காலத்தில் அத்தகு அறிஞரை ஈன்று தருமோ என்று ஐயுறத்தக்க நிலையிலேயே அவற்றின் ஆட்சி நடைபெறுகின்றன.

தென்றல் 21-9-57 இதழில் பேரறிஞர் அவர்கள் 'நன்னூல் நன்னூலா' என்ற போர்க்குரல் செப்பும் தலைப்பில் எழுதிய ஓர் கட்டுரையைக் கண்டு மகிழும் பேறு எனக்குக் கிடைத்தது. 'அதுபற்றித் தங்கள் கருத்தென்ன?' என்று தென்றல் மனையன்பர்கள் என்னிடம் கேட்டபோது, 'பெரிதும் அறிவுக்கு விருந்து, சிறிது மருந்தும் இருக்கிறது' என்று கூறினேன். மருந்து என்று குறிப்பிட்டது எனக்கெழுந்த கருத்து வேறுபாடு—அல்ல ஐயம்—என்பதைத்தான். 'அதுபற்றி நீங்கள் எழுதுவதுதானே?' என்று அன்பர் கேட்டார். தென்றலை வசைப்படுத்தும் எண்ணத்துடன் பேரறிஞர் தேவநேயப்பாவாணரிடம். மொழித்துறையில் போட்டியிட அல்ல, அருகே செல்ல, அவர் பெருமையை அறியாதிருந்தால்தான் நல்லது. நான் அதை நன்கறிந்தவன். கருத்து வேறுபாட்டைக் கருத்து வேறுபாடாகக் குறிக்க எனக்கு மனமில்லாமலில்லை. ஆனால் இன்னும் நன்கு சிந்தித்துத்தான் எழுத வேண்டுமென்று இருந்துவிட்டேன்.

தென்றல் 19-10-57 இதழிலே 'நன்னூல் நன்னூலே' என்று மகுடமிட்ட கட்டுரை கண்டவுடன் உண்மையில் இறும்பூதெய்தினேன். பாவாணர் கருத்துக்கு எதிர் கருத்து விளக்கம் தரும் மற்றோர் அறிஞர் அல்லது குறைந்த அளவு மற்றோர் அறிவுரையாகக் கருதக்கூடிய சிந்தனையாளர் தமிழகத்தில் தோன்றியுள்ளார் என்று மகிழ்ந்தேன். என் தமிழினப்பற்றின் காரணமாக இக்கட்டுரையும் நல்ல கட்டுரையாகத்தான் இருந்தது. ஆனால் புலமையாராய்ச்சியிலே அது நின்றுவிட்டது. 'மொழி நூல்' என்ற ஒரு துறை உண்டு என்பதையே கட்டுரையாளர் எண்ணியதாகத் தெரியவில்லை. தமிழகத்திலே பேராசிரியர் வரதராசனாரையும் பாவாணரையும் தவிர, வேறு எவரும் இத்துறைபற்றிக் கருத்தற்றிருக்கும் நிலையையும், அவர்கள் புகழாலும், மொழிநூல்பற்றிய சரியான மதிப்புத் தமிழகத்தில் ஏற்படாத நிலை குறித்து வருந்தினேன். தென்னகப் பல்கலைக் கழகங்கள மொழியாராய்ச்சியின் அரிச்சுவடி தெரியாது தட்டழியும் நிலைபற்றியும் வருந்தினேன்.

'நன்னூல் நன்னூலே' என்ற வித்வான் எஸ். பி. கெம்பீரனார் அவர்களின் கட்டுரையில் 'ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியன் எனும் இலக்கணப் பேரரசன், நம்முடைய தமிழிலக்கியமென்னும் உலகினைத் தனது இலக்கண விதி என்னும் ஒப்பற்ற செங்கோலோச்சி ஒரு குடைக் கீழ் ஆண்டு வந்தான்' என்ற அழகிய வாசகம் காணப்படுகிறது. இது அவர் 'புலமை' நிலையை—அதாவது இடைக்கால இக்காலப் புலமை நிலையை—படம் பிடித்துக் காட்டுகிறது. இலக்கணம் இலக்கியத்தை ஆள்வதில்லை. இலக்கியமே ஆள்கிறது, இலக்கணம் அதற்குச்

[சே]வை செய்கிறது. கட்டுரையா[ள]ர் தாமே இதற்குச் சான்று [த]ரும் வாசகத்தை நன்னூலி[லி]ருந்தே "எடுத்துக் காட்டியுள்ளார்.

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' (நன்-141) என்பதே அது. தாம் தம் கால இலக்கியம் கண்டு இலக்கணம் வகுத்ததாக நன்னூலார் இங்கே கூறுவது அவர் புதிதாக மேற்கொண்ட 'இடை நிலை'க்கு விளக்கமானாலும், மற்றப்புதுமைகளுக்கும் உரியதேயாகும். 'பழயன கழிதலும் புதியன புகுதலும்' என்ற புறநடைச் சூத்திரமும் அதுவே. ஆனால் இவை தன்னிலை விளக்க வாசகங்கள் மட்டுமல்ல. இதே வாசகங்களை, கருத்தைத் தொல்காப்பியத்திலும் காணலாம். அதற்கும் முன்னிருந்த இலக்கணங்களின் வாசக மேற்கோள்களே அவை என்று உரையாசிரியர் பலர் கருதியுள்ளனர்.

**'இலக்கியமின்றி இலக்கணம்**
**இன்றே**
**எள்ளின்றாகில் எண்ணெயு**
**மின்றே**
**எள்ளினின்று எண்ணெய்**
**எடுப்பதுபோல**
**இலக்கியத்தினின்று எடுபடும்**
**இலக்கணம்'**

என்ற பழஞ் சூத்திரமொன்றை அகத்தியச் சூத்திரம் என்றுமேற் கொண்டு இக்கருத்தின் தொல்லையும் உணர்ந்திருந்தனர். 'நுண்ணிதினுணர்ந்தோர், நூலறி புலவர்' என்ற இலக்கண நூலால் குறித்தது, இலக்கண நூலாரையல்ல, அவர்கள் சிந்தனை கடந்த சிந்தனையாளரான மொழி நூலாரையே. பண்டைத் தமிழர் அறிந்த இச்செய்தியை இடைக்கால இக்காலத் தமிழ்ப் புலவர்களும், முக்கால சமஸ்கிருதப் புலவர்களும் அறிந்திலர். இன்றைய மேனாட்டு மொழி நூலார் அறிந்து வருகின்றனர்.

மொழி நூல் கற்றவர் மட்டுமல்ல, மொழி நூல் கற்பிப்பவர், இயற்றுபவர் மட்டுமல்ல, மொழி நூலை ஆக்கும் சிந்தனை அறிஞர் தேவநேயப்பாவாணர். மொழித் துறையில் கீழ்த் திசையில் நிலவும் அறியாமை இருளைப் போக்கும் அவர் மொழியாராய்ச்சி தமிழினத்துக்கு ஏக்கம் தருவதாயிருப்பதனாலேயே, நம் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் அவர் அறிவை அடக்கி மடக்கி, அவருக்கு உரியசிறப்புத் தராமல் தென்னாட்டுப்புல்லுருவிகளுக்கும் வடநாட்டுக் களைப்பயிர்களுக்கும் ஆக்கம் அளித்து, அவர் பெருமையைத் தமிழகமும் உலகமும் அறியாமல் தடுத்து வருகின்றனர். அதனால்தான் மொழி நூல் மணம் பரவாத நம் நாட்டில் அதுபற்றிக் கனவு காணாத புலவர்கள்கூட அவர் ஆராய்ச்சிகளைச் சரிவர உணர கருத்தை மறுப்பதிலோ அவர் சிறிதும் வெற்றி காணவில்லை.

நன்னூல் நன்னூலன்று என்ற பாவாணர் உணர்ச்சிக்குக் காரணமான காலநிலைச் சூழலைப் பாவணர் ஆங்காங்கு சுட்டிச் சென்றதன்றி விளக்கவில்லை. நிலவட்டும். வேண்டாமென்று யாரும் கூறிவிடவில்லை. பாவாணரும் வாதிடவில்லை. ஆனால் அது 'நல்ல பாம்பு', 'வெள்ளாடு' என்ற வழக்குகள்போல இன்று தகுதி பற்றிய வழக்காகக் கொள்ளப்படத் தக்கதன்று.

## கட்சி வளர....!

சென்னை அரசியலாரின் விசேட கெசட் வெளியாகி இருக்கிறது. அதில் ஊராட்சி மன்றங்கள் பற்றிய பிரத்தியேகக் குறிப்பு அச்சாகி இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்களையும், துணைத்தலைவர்களையும் மன்ற அங்கத்தினர்களே தேர்ந்தெடுப்பார்கள் என்றும், மன்ற உறுப்பினர்களின் பதவி ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சி மன்றங்களை நீக்கும் திட்டம் வேண்டாதது, கூடாதது என்பதை மக்கள் அறிவார்கள். ஆனால் ஊராட்சிமன்ற மசோதாவாகிலும் அந்தக் குறையைப் போக்கும் வகையில் அமையும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதுவும் கூல்முட்டையாகிவிட்டது.

ஊராண்மைக் கழகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களிடம் இருந்தால்தான், ஓரளவு கிராம நலத்தை நம்மால் எதிர்பார்க்க முடியும். உறுப்பினர்களிடம், தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்தால், தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் உறுப்பினர்களின் 'குணாதிசயங்'களை ஒட்டியவராகத்தானிருப்பார். இது விரும்பத்தகாதது.

இந்த முறை, மந்திரிமார்களின் கூட்டு யோசனையில் உருவாகி இருக்கிறது. பொதுமக்களிடம் செல்வாக்கை இழந்த காங்கிரசுக்கு, ஏழைகளின் மத்தியிலே வாழும் பண்ணையார்களைக் கொண்டு புதுபலம் சேர்க்கும் அரசியல் நாடகமாகவே நமக்குப் படுகிறது.

# நல்லபாம்பும் வெள்ளாடும் பெயருக்குப் பொருத்தமானவைகளா?

பெரும் புழமையை அவர்கள் எடுத்துக் காட்டுவர்.

தமிழ் இலக்கண மரபே 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம்' என்பதை ஒத்துக்கொள்கிறது. இது பழந் தமிழர் மொழி நூலுணர்வுக்கு ஒரு சான்று. ஆனால் இடைக்காலத் தமிழர் படிப்படியாக மொழி நூலுணர்வு குன்றி இது மறந்தனர். கட்டுரையாளர் தொல்காப்பியத்தைக் கூறும்போதும் கட்டுரை முழுவதிலும் இதனை மறந்து, நன்னூலார் தன்னிலை விளக்கத்தை ஏற்கும் போதுமட்டும் மேற்கொண்டுள்ளார். இம்முரண்பாட்டை அவர் ஏன் கவனிக்கவில்லை என்று காண முடியவில்லை.

இலக்கியத்துக்கு மேம்பட்டதன்று இலக்கணம். ஆனால் இலக்கணத்துக்கு மேம்பட்டது மொழி நூல். ஒவ்வொரு மொழியிலும் இலக்கியபடி கடந்தே இலக்கணம் ஏற்பட்டது. இலக்கணபடி கடந்து அணிமைக் காலத்திலே-19, 20 நூற்றுண்டுகளிலேயே மொழி நூல் வளர்ந்துள்ளது. ஆனால் தமிழர் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே மொழி நூற்படி அடைந்திருந்தனர். ஆகவே அவர்கள் இலக்கியக் கலையைவிட இலக்கணம் மேம்பட்டதல்லவாயினும், இலக்கிய அறிவைவிட இலக்கண அறிவு மேம்பட்டதென்பதையும், இலக்கண அறிவைவிட மொழி நூலறிவு மேற்பட்டதென்பதை முடியாமல் மறுப்புக்கு எழுந்துவிடுகின்றனர்.

தேவநேயப்பாவாணர் அவர்கள் தம் கட்டுரையில் 'நன்னூல் நன்னூலா?' என்றுபோர்க்குரல் பாணியில் தலைப்புத் தந்துள்ளார் என்பது உண்மையே. பொதுவாக அது அறிஞர் பாணியன்று. அவ்வளவு உணர்ச்சி, பொதுவாக அறிஞர்க்கு ஏற்படுவதில்லை. ஆனால் பாவாணர் அவர்களும் மனிதர், வெறும் இயந்திர அறிஞர் அல்ல. சோற்றுக்குத் தக்கபடி தாளமிடும் கூலியறிஞரும் அல்லர். தமிழினத்தின் உயர்வு உணர்ந்தவர், அதில் பற்று உள்ளவர். அவர் ஆராய்ச்சியை அப்பற்றுப் பாதிக்கவில்லையானாலும், அதன் முடிவில் அப்பற்றுச் செயலாற்றிவிடுகிறது. இது இயல்பே, அறிஞர்க்குக்கூட அந்த உரிமை உண்டு. மேலும் அவர் எழுதுவது பல்கலைக்கழக நூலிலல்ல, பத்திரிகையில் தமிழ்மொழிப் பண்பையும் இனப்பண்பையும் கெடுக்கும் நூல் நன்னூல் என்று அவர் கருதியதினாலேயே அவ்வாறு தலைப்புத் தர நேர்ந்தது. மறுப்பவர் அந்த உணர்ச்சியை மட்டும் மறுத்தால் போதாது. அந்தக் கருத்தையும் மறுத்தல் வேண்டும். ஆனால், கட்டுரையாளர் அந்த உணர்ச்சியை மறுக்க எண்ணியிருக்கலாம். ஆனால் அவரே அந்த உணர்ச்சியைக் காட்டியுள்ளார். அக் ஆனால்கட்டுரையாளரே விளக்கியிருக்கிறார்.

"நம் தமிழ்நாடு தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பும் நன்னூலார் காலத்திற்கு முன்பும் ஆகிய இடைப்பட்ட காலத்தில் வடவர் தொடர்பைப் பெரிதும் மேற்கொண்டு, அவர் தம் நடையுடை பாவனைகளில் பெரிதும்ஈடுபட்டு இருந்ததோடன்றி, அவர் தம் வடமொழியையும் தமிழில் கலந்து வழங்குதலை உயர்ந்த நாகரிகமாகக் கருதி வந்தது....சியக்கங்கன் என்னும் மன்னன்.......அக்காலத் தமிழ் மொழிக்கு ஏற்ற இலக்கணம் இல்லாமை கண்டு வருந்தி... வேண்டினன்" என்ற கட்டுரையாளர் கூற்று, நன்னூல் நன்னூலாவது என்று பாவணர் கூறியதற்கான அடிப்படைக் காரணத்தைக் காட்டுகிறது.

நன்னூல் தமிழகத்தின் ஒரு கேடுகெட்ட அடிமைக் காலத்துக்கேற்ற மற்ற நல்ல நூலாய் வெளிவந்தது. அந்தக் காலத்தில் ஒரு நல்ல நூல் என்ற பொருளிலேயே நன்னூல் என்று பெயர் பெற்றது, போற்றப்பட்டது. பாராட்டப்பட்டது. அம்மரபில் இன்றும் நூலுக்குப் பெயராக நன்னூல் இன்றும் மரபாகவும் இடக்கரடக்களாகவும் கொள்ளத் தக்கதேயாகும் என்பதே பாவணர் அவர்களின் உட்கோள் என்பது வெள்ளிடைமலை. இதனைக் கட்டுரையாளர் மறுத்துவிட்டதாகக் கூறமுடியாது. வடவர் தொடர்பு, வடதிசை சமஸ்கிருதக் கலப்பு, தமிழ் முதன்மை நிலை நழுவிச் சார்பு நிலை எய்தல் ஆகியவை நல்ல பண்புகளே, உயர்ந்த பண்புகளே என்று கட்டுரையாளர் நிலைநாட்டவில்லை. அவ்வாறு நிலைநாட்டாதபோது, நன்னூல் நன்னூலே என்று அவர் முடிவுபடுத்திக் காட்டிவிட்டார் என்று கூறுவதும் முடியாது. வேண்டுமானால் நன்னூல் என்னவோ நல்ல நூல்தான், அதன் காலம் தான் கெட்டது என்று அது முடிவுபடுத்தியிருக்கலாம். இது பற்றி யாருக் கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இதுவே எம்கருத்தும், பாவாணர் கருத்துமாகும்.

ஆனால் கட்டுரையாளர் தலைப்பை மட்டும் எதிர்க்கவில்லை. நன்னூலுக்குச் சப்பைக் கட்டுகள் கட்டியும் முனைந்துள்ளார். அவற்றை ஆராய்வோம்.

- தொடரும் -

# தமிழிலக்கிய மாண்பு!

இன்று உலகிலே எங்கு நோக்கினும் நம்மொழியின் அருமை பற்றியும், நம் இலக்கியங்களின் பெருமை பற்றியும் கற்றோராலும் மற்றோராலும் பேசப்படுகின்றன. அமெரிக்காவிலே, ருசியாவிலே, ஆங்கில நாட்டிலே எங்கும் நம் இலக்கியம் பற்றி பேசப்படுவதைக் கேட்கும்போதெல்லாம் தமிழ் நெஞ்சங்கொண்ட அனைவரும் மகிழ்வுக் கடலில் ஆழ்கின்றனர். உலக இலக்கிய வானிலே எந்த நாட்டு நூலுக்கும் கிடைக்காத, கிட்டாத சிறப்பு இந்த நாட்டு நூலான திருக்குறளுக்குக் கிடைத்திருப்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அப்படி மறுப்பவர்கள் உண்மைக்குத் திரைபோட்டு மறைக்கும் வன்கண்மை கொண்டவராவர். விண்ணுக்கு நிலவு உயர்வைத் தருவதைப்போல் இவ்வுலகுக்கு "குறள்" உயர்வைத் தருகிறது. "பகவத்கீதையைக் காட்டிலும் செப்பமுடைய ஒழுக்க நூல் ஒன்று இந்தியாவிலேயே உண்டென்றால் அந்நூல் திருக்குறளேயாகும்" என்றார் அறிஞர் "ஆல்பர்ட் ஸ்வீட்சர்". மேலும் ஹீராஸ் பாதிரியார், கால்டுவெல், ஜி. யு. போப் போன்றவர்கள் "தமிழிலக்கியங்களின் மாண்பினைச் சொல்லால் விரித்துக்கூற இயலாது" என்று கூறிச் சென்றுள்ளனர். அவர்கள் அனைவரும் தமிழக இலக்கிய ஆழியில் மூழ்கி நல்ல பல முத்துக்களைக் கண்டெடுத்தவர்கள்; இப்படி வேற்றுநாட்டவரும், வேற்று மொழியினரும், வேற்றுக் கருத்துக்கொண்டவரும் தமிழக இலக்கியங்களை ஏற்றியும் போற்றியும் புகழ்வதற்குக் காரணம் என்னவென்பதைத் திறனாய்வுக்கண் கொண்டு காணவேண்டும்.

இவ்வுலகிலே தோன்றிய திறனாய்வு அறிஞர்கள் (Cretics) அனைவரும் ஒரு சிறந்த இலக்கியம் என்பது என்னென்ன பண்புகளைத் தன்னகத்தே கொண்டதாகத் திகழவேண்டுமென்று கருதினார்களோ அத்துணைப் பண்புகளையும் தன்பால் பெற்றுத் திகழ்கின்றன தமிழக இலக்கியங்கள். ஒரு நாடு உலகில், "பாருக்குள்ளே நல்ல நாடு" என்ற புகழினைப் பெறுவதற்கும், பெருமை போவதற்கும் அந்நாட்டு மக்களே காரணமாவர். நாடாயிருக்கலாம் அல்லது காடாயிருக்கலாம் அதைப் பற்றிக் கவலை இல்லை; அந்த நாட்டு மக்கள் பாடறிந்து ஒழுகும் பண்பாடுமிக்கவர்களாயிருப்பின் உலகில் உறுதியாகப் புகழினை அடையமுடியும் என்பதே நம் சங்க இலக்கியக் கொள்கையாகும்.

"நாடா கொன்றோ; காடா கொன்றோ
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம்-187)

இப்பாட்டினால் நாட்டை உருவாக்குபவர்கள் மக்கள் என்ற கருத்து கிடைக்கிறது. அப்படியானால் மக்களை உருவாக்குவது எது? இவ்வினாவிற்கு அறிஞர் 'மார்லி' விடை கூறியுள்ளார். 'இலக்கியம், மக்களிடையே நல்ல பண்புகளை உருவாக்கும் கருவிகளில், சிறந்தது' **(Literature is one of the best instruments for forming charecter)** எனவே இலக்கியமே மக்களின் உள்ளத்தினை உயர்த்தும் ஆற்றலுடையது. நம் தமிழக இலக்கியங்கள் அனைத்திலும் இப்பண்பு மிளிர்வதைக் காணலாம். அகநானூற்றினை அண்டிச் செல்கின்ற நேரத்திலும், புறநானூற்றினைப் புரட்டுகின்றநேரத்திலும், தொல்காப்பியத்தைத் தொடுகின்றநேரத்திலும், திருக்குறளைத் திறக்கின்ற நேரத்திலும் நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் ஒழுக்க வாழ்வினை நோக்கி நடைபோடுவதைத் தெள்ளிதின் உணரலாம். காட்டாக ஒன்று காண்போம்; கடவுள் மாய்த்த இளம்பெருவழுதி பாடியதாகப் புறத்திலே ஒரு பாடல் காணப்படுகிறது. அப்பாடல் இது :—

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே." (புறம்-182)

இப்பாட்டைப் படித்த யாரும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் மாறுவார்களே ஒழிய, மாறாக புன்னெறியில் செல்லும் இழிமனம் கொண்டவர்களாக மாறுவார்களா? என்பதை உன்னிப் பார்க்கவும், நம் நாட்டவருக்கு மட்டுமின்றி எந்நாட்டவருக்கும் வழிகாட்டும் ஒரு நல்ல கருத்தமைந்த பாட்டாகும் இது. அறிஞர் 'மார்லி'யின் கூற்றிற்கு இப்பாடல் ஒன்றே சான்று பகரும்.

இம்மண்டினி ஞாலத்தில் எழுந்த ஏனைய நாட்டுக் கவிஞர்கள் அனைவரும் மன்னனையும் மகேஸ்வரனையும், வேதாளத்தையும், பூதத்தையும், மந்திரத்தையும், தந்திரத்தையும் தங்கள் இலக்கியங்களிலே நடமாட விட்ட நேரத்தில், நம் தமிழ் நாட்டுக் கவிஞர்கள் அனைவரும் இயற்கை அன்னையையும், நடமாட விட்டிருக்கிறார்கள். அதன் விளைவுதான் சிலம்பும், மேகலையும், எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும். இந்த இலக்கியங்களில் அங்கொன்றும், இங்கொன்றுமாக இயற்கைக்கு மாறானவற்றைக் காண்கின்றோமே தவிர பல இடங்களில் காணமுடியவில்லை. நிகழ்ச்சிகள் அனைத்தும் இயற்கையோடியைந்து நடைபோடுவதையே காண்கின்றோம். பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்து மக்களை காட்டுமிராண்டி வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் வடமொழி இலக்கியங்கள் பல்கி இருந்த நேரத்திலேதான் திருவள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்று முழங்கினார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இவ்வரிய கருத்தினை உலகுக்களித்தது நம் தமிழ்நாட்டு இலக்கியம் என்றால் நம் தமிழிலக்கிய மாண்பினை என்னென்று நவில்வது? இந்தக் கருத்து உலகம் உள்ளளவும் அழியாது நின்று நிலவும், உலகம் உய்யவேண்டிய அடிப்படை உண்மைகளை உலகிற்கு எடுத்தியம்புவன எல்லாம் நம்நாட்டு இலக்கியங்களேயாகும். அதனால்தான் "ஆல்பர்ட் ஸ்வீட்சர்" தமிழ் நாட்டைப் பார்க்க நான் பெரு விருப்பமுடையவனாக இருக்கிறேன் என்று கூறினார். ஹீராஸ் பாதிரியார் தன்னை 'ஒரு திராவிட மகன்' என்று கூறிக்கொண்டார்.

இறுதியாகத் தமிழிலக்கியங்கள் அனைத்தும் தமிழ்நாடு மட்டும் வாழவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தோடு எழாமல் உலகம் வாழவேண்டும் என்ற பொதுநோக்கை அடிப்படையாகக் கொண்டே எழுந்துள்ளன. "யாதும் ஊரே; யாவருங் கேளிர்" என்ற உலகப் பொதுக்கருத்தை அடிப்படையாக் கொண்டவையே சங்கத்து நிலவிய இலக்கியங்கள். "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்றே தொடங்குகிறது சிலப்பதிகாரம்; "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்றே கம்பராமாயணம் தொடங்குகிறது; "உலகெலாம்" என்றே தொடங்குகிறதுபெரியபுராணம்; "ஆதிபகவன் முதற்றே உலகு" என்றே தொடங்குகிறது குறள். இவ்வாறே உலகை முன்னிறுத்தியே தொடங்குகின்றன ஏனைய இலக்கியங்களும், இக்கருத்தும் தமிழிலக்கிய மாண்பினை நமக்கு வெள்ளிடை மலையென விளக்குகிறது.

எனவே இதுகாறும் கூறியவற்றால் நம் தமிழிலக்கியங்கள் உலகில் தனிச் சிறப்புடையவை என்றும், எக்காலத்தும் நின்று நிலவவல்ல ஆற்றலுடையவை என்றும் அறிந்தோம். அவ்விலக்கியங்கள் காட்டுகின்ற வழியில் நம் வாழ்க்கையினை நடத்திச் செல்வோமாக.

—"அறவாணன்"

## பன்மொழிப் புலவர் படத் திறப்புவிழா

சென்னை, சேப்பாக்கம், அழகிரி நினைவு மன்றத்தின் சார்பில் சென்ற 12-ம்தேதி சனிக்கிழமையன்று மாலை 6 மணியளவில் சேப்பாக்கம் அழகிரி திடலில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் படத் திறப்பு விழா தோழர் நீல. நாராயணன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. விழா துவக்கத்தில் பேசிய **திரு. என். சீவரத்தினம் அவர்கள்**, நாடு, ஒரு நல்லறிஞரை சட்ட மன்றத்திற்கு அனுப்பும் வாய்ப்பை சென்ற தேர்தலில் இழந்துவிட்டது ஒரு சில வாக்கு வித்தியாசத்தால் என்பதை குறிப்பிட்டார். அடுத்து பேசிய **நாஞ்சில். கி. மனோகரன் எம். ஏ.** தானும், அப்பாதுரையாரும் நேரிடையாக நெருங்கி பழகியது சொற்ப காலமேயாயினும் அவர்களுடைய புத்தகங்கள் பலவற்றை தான் வாங்கி வாசித்துள்ளதாகவும்-மிக்க அறிவுத் திறனும், கருத்துத் தெளிவும் பல மொழிகளிற் வல்லுனராகவும் உள்ள இத்தகைய அறிஞர்களை அவர்களின் வாழ்நாட்களிலேயே கவுரவிப்பதுதான் மனித பண்புக்கு ஏற்றது என்பதைச் சுட்டிக் காட்டி-இத்தகைய அறிஞர்களால் போற்றப்படும் தமிழை அழிக்க வரும் இந்தியை விரட்டி அடிக்க தமிழர்கள் அனைவரும் ஒத்துழைக்க உறுதிக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கடைசியாக ஆசிரியர் **கண்ணதாசன்** அப்பாதுரையார் படத்தைத் திறந்து வைத்து பேசும்போது தமிழ்நாட்டிலே பண்டைக் கால முதல் புலவர்களை பிடித்து வரும் வறுமைநோய் தற்கால தமிழறிஞர்களையும் விடாமல் தொற்றிக்கொள்கிறது என்றும்-இந்நிலையைப் போக்க அப்பாதுரையார் போன்ற அறிஞர்களுக்கு விழாக்கள் நடத்தி நல்லதொரு நிதி அளித்து அவர்களை மேன்மேலும் தமிழுக்கு தொண்டு செய்ய ஊக்குவிக்க வேண்டும் எனவும் அதற்காகவே அப்பாதுரையார் அவர்களுக்கு மணி விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவ்விழாவில் 25000 ரூபாய்க்கு குறையாமல் நிதி அளிக்க தமிழர்கள் எல்லோரும் தவறாது உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இரவு 10 மணியளவில் தோழர் பி. கே. கோவிந்தனால் தயாரிக்கப்பட்ட 'வாழட்டும்' என்ற நாடகம் இரா. இளம்பரிதி குழுவினரால் நடிக்கப் பெற்றது.

— 4ம் பக்கம் தொடர்ச்சி —

தேசம், ஒரு குலமும் நாடியதில்லை. அவர்கள் விரும்பியது வருணாசிரம தருமம்– அத்தேச வாழ்வை, சமுதாய வாழ்வை, பொருளியல் வாழ்வைப் பிரித்தது. ஒரு தேசத்தை மட்டுமல்ல, ஒரு ஊரையே ஒன்றாக வாழமுடியாமல், துண்டு துண்டாகப் பிரித்தது. சமத்துவம், 'சம உரிமை கொடுத்து ஏற்றத்தாழ்வை உண்டுபண்ணிற்று. ஆனால் தமிழர் இரண்டாயிர மூவாயிர ஆண்டுகட்கு முன்னும் ஒருலகைக் கனவு கண்டவர்கள். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று ஒருலக அடிப்படையிலே ஒரே ஆண்டவனைக் கனவு கண்டவர்கள். தமிழ் பேசும் பகுதிகளனைத்தையும்-தென்னாட்டையும் தென்னவர் குடியேறி ஆண்ட பகுதிகளையும் ஒருங்கு சேர்த்து தமிழுலகம் என்றே கூறினர்.

தமிழர் இன்று அயலினத்தார் பரப்பாகிய இந்தியாவுடன் கட்டுண்டு மறுகுகின்றனர். ஆனால் தமிழ் பேசும் தமிழர், வாழும் தமிழுலகத்தினின்று வெட்டுண்டு கிடக்கின்றனர். அதுமட்டுமோ? தமிழர் வெளிநாடுகளில்கூட வாழமுடியாத நிலையை இந்த அயலினக் கூட்டுறவு நீடிக்கிறது. அது தமிழரைத் தமிழரிடமிருந்து பிரித்து வைக்கிறது. தமிழினத்தவன் தமிழனைத் படைக்கும்படி ஓயாது தூண்டி வருகிறது. உலகம் என்ற சொல் தமிழிலக்கியத்தில் பயின்ற அளவு உலகில் வேறெந்த இலக்கியத்திலும் பயின்றதில்லை. உலகம் என்ற சொல்லையே மறுஉலகச் சொல்லாகக்கொண்டு தொடங்கிய இலக்கிய ஏடுகள், சமய ஏடுகள், காவியம் பற்பல 'உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்' 'உலகம் யாவையும் தாமுளவாக்கிய தலைவர்' என்று இறைவனைப் போற்றினர். 'உலகெலாம் இன்புற்றிருக்க' அளாவினர். அந்த உலகத்தையும் ஓர் இறைவன் படைப்பான ஒரே உலகம், ஒரே ஆண்டவனை ஒப்பற்ற ஒரே தந்தையாகக் கொண்ட ஒருலகக் குடும்பம். சாதிவேறுபாடற்ற, இனவேறுபாடு கடந்த, சமயங்கடந்த சமயவேறுபாடு கடந்த ஒரு கடவுட் படைப்பான ஒருலகம், 'உலகெலாம் இன்புற்றிருக்கக் கனவு கண்ட' இந்தத் தமிழகத்துக்குத்தான் இன்று ஒருலகில் இடம் வேண்டாம் என்கின்றனர் ஒருலகப் பண்பும், ஒருகுலப் பண்பும் அற்ற 'குலநீதி' உத்தமர்கள்!

ஒருலக அரசு அணிமைக்காலக் கனவு. ஆனால் இன்று அது நாட்டடிப்படையிலே, இன அடிப்படையிலே, தேசிய அடிப்படையிலே மட்டுமே அமைந்து வருகிறது. அப்படித்தான் அமையமுடியும். ஏனெனில் அது சர்வ தேசிய ஒருலகம். இதுமட்டுமன்று. இன்னும் ஒருலக அமைப்பு விடுதலையடையாத, தன்னுரிமையற்ற தேசிய இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் தரவில்லை. விடுதலை அடையாத நாடுகளின் பிரதிநிதித்துவம் வழங்குவதில் அவற்றின் தேசிய வாழ்வைத் தன் அகன்ற வயிற்றுக்குரிய சொந்த உடைமையாகக் கருதும் ஏகாதிபத்தியங்களே தடையாய் இருக்கின்றன. இந்நிலையில் விடுதலை பெற்ற பர்மாவும் இலங்கையும் இடம்பெற்றதுபோல, திராவிடம் இடம்பெருமல் பாரத ஏகாதிபத்தியம்தான் தடுத்து வருகிறது. ஒருலகக் கனவு கண்ட, ஒருலகப் பண்புமிக்க, ஒருலகத்தைப் படைத்துருவாக்கும் ஆற்றல்மிக்க திராவிடத்துக்குத்தான் அந்த ஒருலகில் இடமில்லாமல் பாரத ஏகாதிபத்தியம் தடுத்து வருகிறது. மற்ற ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு திராவிடநாடு போன்ற தனி இனங்களின் உரிமைகளை ஏப்பமிடப் பாரத பக்தர்கள் படபடக்கின்றனர்.

தமிழன் ஒருலகை விரும்புகிறன். ஆர்வமாக விரும்புகிறன். ஆனால் அவன் விரும்பும் ஒருலகில் அவனுக்கு இடம் வேண்டும். அவன் உரிமைக்கும் அவன் இனத்துக்கும் மற்ற இனங்களுடன் ஒத்த, மற்ற தேசியங்களுடன் ஒத்த சமஉரிமை வேண்டும். தமிழனுக்கு, தமிழினமாகிய திராவிட இனத்துக்கு, திராவிடத்தைப்போலவே ஏகாதிபத்திய இனங்களின் காலடியில் பட்டுத் தவறும் பல தேசிய இனங்களுக்கு உரிமையில்லாமல் ஒருலகம் என்று பேசுவது ஏகாதிபத்தியங்களின் திமிர் பிடித்த ஆணவப் பித்தலாட்டமே தவிர வேறில்லை.

தமிழன், திராவிடன் உரிமையில்லாத ஒருலகம் அமையமுடியாது. நீடித்து உலக மக்களுக்கு நலந்தந்து வளரமுடியாது. ஏனெனில் அதைக் கனவுகண்டு, அதற்கான திட்டங்களைத் தன் தேசியத்தில் உருவாக்கிய தமிழினமே அதைத் திறம்பட இயக்கமுடியும். தமிழன் சார்பில், திராவிடத்தின் சார்பில் வடதிசை ஏகாதிபத்தியம் இருந்தால், அது தமிழன் உரிமையைமட்டும் அழிப்பதாயிராது. தமிழினப் பண்பாகிய ஒருலகப் பண்பையும் குடியாட்சிப் பண்பையும் சமதருமப் பண்பையும் உலகில் படிப்படியாக ஒழிப்பதாகவே இயங்கமுடியும். ஏனெனில் வருணாசிரம தரும நெறியில் ஊறிய அதன் அறிவு எல்லாவற்றையும் அந்த உயர்வு தாழ்வு பெற பாட்டுருவிலேயே காணமுடியும், பேணமுடியும், வளர்க்க முடியும்.

தொடரும்

## அவமானம்

திருவாளர் கிருஷ்ணமாச்சாரி திரும்பி வருகிறார்! ஆனால் பூ மணத்தோடு வரவில்லை! தோல்வியை சுமந்துகொண்டு வெறுங்கையோடு வருகிறார். அமெரிக்காவுக்கு அவரை வழியனுப்புகிறபொழுது மலர்ந்த முகத்தோடு அனுப்பினார்கள். நிதியமைச்சரும் புன்னகை பூத்த முகத்தோடு "டாட்டா" கூறி விட்டுச் சென்றார்.

ஆனால் அவருக்குப் பின்னால் சென்ற 'டாடாவும்' 'பிர்லாவும்' அமெரிக்காவிடமிருந்து 20கோடி கடன் பெற்று வந்திருக்கிறார்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்த! அரசாங்க முத்திரையோடு சென்ற நிதியமைச்சரோ மாமிசத்தைப் பறிகொடுத்தபார்ப்பனப்பெண் நிலையிலே வருகிறார்! தனது மேதா விலாசம் அமெரிக்காவில் எடுபடவில்லை!

அமெரிக்காவுக்கு டி. டி. கே. கடன் வாங்கச் சென்றிருக்கிறார் என்ற செய்தி பாகிஸ்தானுக்கு தெரிந்ததும், அமெரிக்காவை நோக்கி பாகிஸ்தான் ஒரு குரலெழுப்பிற்று. 'அமெரிக்க சர்க்காரே இந்தியாவுக்கு கடன் கொடுக்காதீர்கள். பிறகு உங்கள் பணத்தைப் பெற்றே இந்தியா, பாகிஸ்தானை எதிர்க்கும். இத்தனை நாட்களாக நீங்கள் எங்களுக்கு செய்துவந்த உதவியெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிடும். ஆகையால் இந்தியாவுக்கு கடன் கொடுக்காதீர்கள்" என்றுகேட்டுக்கொண்டது.

இதையறிந்து கொண்ட நமது நிதியமைச்சரவர்கள், கெட்டிக்காரத்தனமாகத்தான் பிச்சை கேட்டார்! 'அமெரிக்க குடியரசுத்தலைவர் அவர்களே' நாங்கள் கடன் கேட்பது - எதற்காகத் தெரியுமா? போட்டுவிட்டு நிறைவேற்ற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கோ அல்லது வேறு எதற்குமோ அல்ல! இந்தியாவில் கம்யூனிசம் ஒருபகுதியில் வளர்ந்துகொண்டே வருகிறது. அங்குள்ள கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவின் உதவியோடு இந்தியாவை எதிர்த்தாலும் எதிர்க்கலாம். அப்பொழுது உங்கள் உதவி எங்களுக்கு அதிகம் தேவைப்படும்! முன்னெச்சரிக்கையாக இப்பொழுதே கம்யூனிசம் பராவாமல் தடுப்பதற்கு கடன் தந்து உதவுங்கள் என்று அரசியல் தந்திரத்தோடு கேட்டார்.

இதே சமயத்தில் ஐ. நா.சபையில் பேசும் இயந்திரம் எனப் பெயர்பெற்ற கிருஷ்ணமேனன் அவர்கள் சீனப்பிரதமர் சூ. என். லாய் தந்த விருந்தொன்றில் கலந்துகொண்டு பேசுகிறபொழுது குறிப்பிட்டார், சீனா விரைவாக முன்னேறியிருக்கிறது. சீனாவின் முன்னேற்றம் மற்ற நாடுகளுக்கு வழிகாட்டி, என்று கம்யூனிஸ்டுகளை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். கிருஷ்ணமேனன் அவர்களின் இந்தச் சொற்பொழிவு டி.டி.கே.யின் கம்யூனிச ஒழிப்புக்குக்கடன் பெறுவதற்காக போடும் நாடகம் என்பதை வெள்ளிடைமலையாக்கியது!

நேரு தனக்குப் பின்னால் வாரிசே இல்லாமல் கெடுத்து வைத்திருக்கிற செல்லப்பிள்ளைகளில் டி. டி கேயும் ஒருவர் என்பதை எளிதில் புரிந்துகொண்ட அமெரிக்கா, 'கடன் தருகிறோம் என்ற உறுதிமொழி கொடுக்காமல் "ஆகட்டும் பார்க்கலாம்" என்ற காமராஜர் பாணியிலே கூறி டி. டி கே.யை வழியனுப்பி வைத்திருக்கிறது!

அமெரிக்காவிடமோ கடன் பெற வழியில்லை. இந்த நிலையில் கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பு கூடாது - என்று நினைத்த நேரு பண்டிதர், தவறு செய்துவிட்ட பிள்ளைக்காக மன்னிப்புக் கோருகிறார். கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதற்காக கடன் கொடுங்கள் என்று; கேட்டிருந்தால் அது வாய்த்தவறுதலாக கேட்டதாகுமாம்! இந்தச் செய்தியை தீபாவளித் 'தினமணி' தருகிறது.

ஒரு பொறுப்புள்ள நிதியமைச்சர், ஒரு வல்லரசு நாட்டுக்குச் சென்று உலக அரங்கில் செல்வாக்குப்பெற்றிருக்கும் மற்றொரு நாட்டைப் பற்றி அவதூருகப் பேசுவாராம்; ஆனால் அதை வேண்டுமென்றே பேசியதாக எண்ணக்கூடாதாம். மன்னிப்பு கேட்பது பண்டிதருக்கு புதிதல்ல. இது அவருக்கு பழக்கமாகிவிட்ட ஒன்று! வீம்பு பேசுவதும் அதிலே தோல்வி கண்டபின் சரண் அடைவதும் பண்டிதரின் வாழ்க்கையில் வழக்கமாகிவிட்ட நிகழ்ச்சிகள். மக்களைப் பற்றி அவருக்கு அதிகம் கவலையில்லை உலக சமாதானப் புருவாகப் பறப்பதிலேதான் அவருக்கு ஆசை அதிகம்! தேர்தல் காலத்தில் உலா வருவதும் எதிர்கட்சிகளை நாக்கிலே நரம்பின்றி திட்டுவதும் பின் காடாறு மாதம், நாடாறு மாதம் சென்றுவந்த விக்கிரமாதித்தனைப்போல், சில மாதங்களுக்கு வெளிநாடுகளில் விருந்து வேடிக்கை இவைகளில் கலந்துகொண்டு தனிப்பட்ட முறையில் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளுவதும் பண்டிதருக்கு பிடித்தமாகிவிட்ட ஒன்று! இல்லை! தந்திரம்!

ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறைப்பது அவமானமாகும் என்றார்கள். இன்றோ, குறித்த அளவு பணம் கிடைக்காவிட்டால் திட்டங்கள் குறைக்கப்படும் என்கிறார்கள்! அவமானம்!

—தினகரன்.

## வெண்பாப் போட்டி-6.

### ஊடல் வெண்பா

அகத்துறையில், ஊடல் முறைப்படி விருப்பம்போல் எழுதலாம். ஊடல், ஒரு நாடகம்போல் அமைதல் வேண்டும். விரும்பினால், வெண்பாவின் கடைசி இரு வரிகளாக, ஒரு திருக்குறளையே முழுக்க எடுத்தாளலாம். (திருக்குறள் சோமேசர் வெண்பாவைப்போல).

முடிவு தேதி 2-11-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

# சி. ஆர். என்ருல்...!

தென்னாட்டில் எத்தனை காங்கிரஸ் தலைவர்கள் இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் இல்லாத சிறப்பு கிடைக்காத புகழ் ஆச்சாரியாருக்குக் கிடைத்தது. வேறு எந்தத் தமிழருக்கும் கிடைக்கப் பெருத 'ஜி' பட்டம் ஆச்சாரியாருக்குத் தானே கிடைத்தது! காந்திஜி, நேருஜி, நேதாஜி—இந்த வரிசையில் ஜி' பட்டம் பெற்றவர்கள் சி. ஆர். ஐத்தவிர வேறு தமிழரில்லை. இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லுவார்கள். முதற் காரணம் சி. ஆர். பார்ப்பனர் என்பதால் என்பார்கள்; மற்ருெரு காரணம் சி. ஆர். காந்தியாரின் சம்மந்தி என்பதால் என்று சொல்லுவார்கள். மொத்தத்தில் காந்தியாரால் என்று சொன்னல் நம்புவதற்கு நியாயமிருக்கிறது. சத்தியமூர்த்தி பார்ப்பனரென்ருலும், சி. ஆர். ஆதரித்த அளவிற்கு சத்தியமூர்த்தி இந்துமதத்தை ஆதரிக்கவில்லை. இந்த ஒரு காரணம்தான் காந்தியார், ஆச்சாரியார்மீது பற்று வைக்க மூலகாரணமாக இருந்தது. அடுத்ததுதான் கொள்வினை கொடுப்பினை!

வடநாட்டுத் தலைவர்கள் இன்றையதினம் இம்மியளவும் காந்தியார் சொன்னதைப் பின்பற்ற வில்லையென்ருலும் ஆச்சாரியார் விஷயத்தில மட்டும் அவர்கள் தவறவில்லை. இந்தியத் துணைக்கண்டம் 'டொமீனியன்' அந்தஸ்தில் இருந்த காலத்திலேயே ஆச்சாரியாருக்கு ஒரு பதவியைக் கொடுத்து கடமையைத் தீர்த்துக்கொண்டார்கள். அந்தக் 'கவர்னர் ஜெனரல்' பதவி அற்ப ஆயுள் கொண்டது என்று தெரிந்துதான் ஆச்சாரியாருக்குக் கொடுத்தார்கள் என்பது பகிரங்க ரகசியம்! அதற்குப் பிறகு எத்தனையோ பேருக்குப் புதுப்புதுத் பதவிகள் கிடைத்தன. அப்போதெல்லாம் டெல்லிப் பூசாரிகளுக்கு ஆச்சாரியார் நினைவு வருவதில்லை.

ஆச்சாரியாருக்கு எப்போதும் பிடிவாதம் உண்டு. அந்தப் பிடிவாதத்திற்குக் காந்தியார் காலத்திலே மதிப்பிருந்தது.

காங்கிரஸ் சுதந்திரப் போராட்டத்தை நடத்திவந்த காலை, வீரம் வேண்டுமா, விவேகம் வேண்டுமா என்ற தகராறுக்குரிய நிலைக்கு காங்கிரஸ் பலதடவை வந்தது. அந்த நேரங்களிலெல்லாம் ஆச்சாரியார் விவேகத்தின் சார்பில் நின்று வாதாடினர். அந்த வாதம், பெரும்பாலான இடங்களில் ஆங்கிலேயர் சார்புடையதுபோல் தோன்றினலும் நிகர லாபம் காங்கிரசுக்கே சேர்ந்து வந்தது. இதைக் காந்தியார் உணர்ந்துகொண்டார். பண்டிதநேரு அதைப் பலமாக எதிர்த்தார். இப்படி ஒரு முறையா, இரு முறையா, பல தடவை! இன்றைக்கும் நேருவுக்கும் ஆச்சாரியாருக்கும் பல சிக்கல்களில் கருத்து வேறுபாடு நிலவுகிறது என்பதைத் தலைவர்கள் உணர்ந்திருக்கிருர்கள்.

ஆச்சாரியார் எதிர்த்தது அதிகம். வெற்றிபெற்றது ஒன்ருே இரண்டோதான்! காரணம் என்ன? தனக்குப் பட்டதைச் சரி என்று சொன்னதின் விளைவு என்பதைக் காட்டிலும், வீம்புக்கு அவர் முதலிடம் கொடுத்ததே என்னலாம். தன் வயதிற்கு குறைந்தவர்கள் தனக்கு நிகருள்ளவர்களாகார் என்ற எண்ணம்தான் இன்றையதினம் ஆச்சாரியாரின் நுண்ணறிவை பயனற்றதாக்கி விட்டது என்கிருர்கள். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது.

அந்தக் காலத்தில் சரியாகவோ, தவருகவோ, ஆச்சாரியார் சில முயற்சிகளில் ஈடுபட்டார். அந்த முயற்சிகள் இந்திய விடுதலைக்குப் பெருந்துணை புரிந்திருக்கின்றன.

உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலத்தில், கராச்சிக் காங்கிரசில் நிறைவேறிய படைக்குறைப்புத் தீர்மானம் பற்றி சர்ச்சை எழுந்தது. காந்தியார், யுத்தத்தில், இந்தியர் தலையிடக் கூடாதென்ருர். இதை ஆச்சாரியார் மறுத்தார். வாதம் வளர்ந்தது. முடிவில் ஆச்சாரியார் வென்ருர். அதன் பிறகு புனவில் கூடிய காங்கிரசில், 'இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்தால், ஜப்பானிய யுத்தத்தில் இந்தியா பிரிட்டனுக்கு உதவும்' என்று முடிவாயிற்று.

காந்தியார் 'குவிட் இந்தியா' இயக்கத்தை நடத்தினர். அதற்கு ஆச்சாரியார் ஒரு திருத்தம் கொண்டுவந்தார். பத்துக்கோடி முஸ்லீம்களைக் கொண்ட லீக் இயக்கத்தின் ஆதரவையும் பெற்று 'குவிட் இந்தியா' இயக்கத்தை நடத்தினல் நாம் வெற்றி பெறமுடியும் என்று ஆச்சாரியார் சொன்னர். அதற்காக பாகிஸ்தான் பிரிவினையை ஆதரிக்கத் தூண்டினர். காந்தியார், நேரு, படேல், ஆகிய காங்கிரஸ் தலைவர்கள் எல்லோருமே இந்த முடிவை எதிர்த்தார்கள்; பலமாகக் கண்டித்தார்கள். ஆச்சாரியார் தூற்றலைப் பொருட்படுத்தவில்லை. **'இந்தியச் சிக்கல் தீருவதற்கு வழி'** என்ற சிறு நூலை லண்டனில் அவர் வெளியிட்டார். அதன் பிறகுதான் பிரிட்டிஷ் சர்க்கார் கிரிப்சை இந்தியாவுக்கு அனுப்பினர்கள்.

எப்படியோ இந்தியா சுதந்திரம் பெற்றது. சொந்த ஆட்சி வந்துவிட்டது என்பதற்காக எல்லாவற்றையும் ஆதரித்துவிடவில்லை. ஆச்சாரியார், அவருக்கு வேண்டாததையெல்லாம் எதிர்த்தார். வேண்டியதையெல்லாம் யாரையும் கேட்காமல் புகுத்தினர். இது பிடிவாதமோ, பிறவிக்குணமோ தெரியவில்லை! பி. சி. ஜி. யை எதிர்த்தார். இது மருத்துவர் பிரச்சினை; என்ருலும் தனக்குப் பட்டதை சொன்னர். ஆச்சாரியாருக்குக் கை தூக்கியவர்களும் இருந்தார்கள்.

சூயஸ் கால்வாய் தகராறில் இந்திய சர்க்காரைப் பலமாகக் கண்டித்து காமன்வெல்த்திலிருந்து விலகச் சொன்னர். குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை வைத்து காமன்வெல்த்திலிருந்து இந்தியாவை விலகச் சொன்னரே தவிர, காமன்வெல்த் உறவே வேண்டாமென்று அவர் கூறியிருந்தால் இன்னும் விவேகமான யோசனையாக இருந்திருக்கும்.

இந்திய சர்க்காரின் வரி விதிப்பைக் கண்டித்தார். ஓரளவு மக்கள் ஆதரவு இருந்தது.

இறுதியாக அவர் இந்தியை எதிர்த்திருக்கிருர். அண்மைக் காலத்தில் ஆச்சரியார் தலையிட்டு எதிர்த்த காரியங்களில் இந்தி எதிர்ப்புத்தான் தமிழர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருக்கிறது. இது ஆச்சாரியார் அவரது பொது வாழ்வில் கண்டிராத ஒன்ருகும்.

பழம் பெரும் தேசபக்தராகிய அவர், எப்போதும் செல்லாத ஒன்றை இப்போது கிளம்பியிருக்கும் இந்தி எதிர்ப்பின் போது மனம் விட்டுக் கூறியிருக்கிருர்.

ஆச்சாரியார் எப்போதுமே தவறை ஒப்புக்கொண்டதே இல்லை. இந்த முறை அந்தப் பெருந்தன்மை அவரை அணைத்துக் கொண்டது, தமிழ் மக்கள் எண்ணி எண்ணி மகிழத்தக்க செயலாகும்.

**'என்னுடைய வாதத்தைக் காட்டிலும் மக்கள்மீது** எனக்**குள்ள அன்பு அ**திகம்' என்று, என்ருவது ஆச்சாரியார் சொன்னதைக் கேள்விப்பட்டிருக்கிருேமா?

அவ்வாறு பேச வைத்த பெருமை தி. மு. க.வையே சாரும். ஆச்சாரியார் இப்போதிருக்கிற வேகத்தில் இந்தி எதிர்ப்பு அணியில் சேர்ந்து காமராசர் சர்க்காரால் கைதானலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதைத் தமிழர் வரவேற்பர்!

—தென்னரசு



**ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சிகள்**

அக். 27—வள்ளூர்
,, 28—வில்லிவாக்கம்
,, 31—கிருஷ்ணம்பேட்டை, சென்னை
நவ. 3 - கும்பகோணம்
,, 4—காரைக்குடி
,, 10—சூளை, சென்னை.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

ருந்து என்னைக் குடைகிறது. வாயில்லை.

இதன் பிறகு, என்னை அடைய டியாது என்று குறிப்பிட்டே ல்லவா? அது 'எதன் பிறகு ன்று கூற எனக்கு ஏனோ' வட்கமாக இருக்கிறது. எதற்கு வட்கப்பட வேண்டுமோ-தைச் சொல்லக் கூச்சப்பட்டு றைமுகமாக வெளிப்படுத்த வேண்டுமோ அதை திறந்து ழுதிவிட்டு தேவையில்லாத ன்றுக்கு இப்படி குழைந்து ருகிச் சாகிறேனே என்று பார்க் ருயா? அதுதான் என் குணம்!

என்னவோ, 'என்னைப்பற்றி உன்னிடம் கூற வேண்டும்' என்று நினைத்த நினைப்புதான் எனக்கு மிகப் பெரிய பாரமாக இருந்தது. அதை லேசாக இறக்கி வைக்கவேண்டும் என நினைத் தேன். ஆனால் முழுவதும் இறக்க முடியவில்லை. இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த பாரத் திலிருந்து ஓரளவு குறைந்திருப் பதாக உணர்கிறேனே தவிர எல்லாவற்றையும் இறக்கிவிட வில்லை. ஆனாலும் இப்போதுள்ள நிறை குறைந்த பளுவை சுமக்க நான் சுணங்கவில்லை. இது அவ்வளவு சுமையாக எனக்குப் படவில்லை. இதை என் ஆயுள் பூராவுக்கும் என்னால் சுமக்க முடியும்.

என் ஆத்ம உணர்ச்சிகளை யெல்லாம் எழுத்துருவிலே எழுதித் தீர்க்க முடியாததற்கு மன்னிக்கக் கோருகிறேன்.

இந்த கடிதத்துக்கு நான் பதிலோ-பிரதிஉபகாரமோ எதிர் பார்க்கவில்லை. நான் தெரிவிக்க நினைத்தேன் தெரிவித்தும்விட் டேன். தயவுசெய்து என்னை — இதற்கு முன்னால் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இனிமேல் காதலிக்க வேண்டாம் — தயவு செய்து வேண்டாம்.

காதல் கொடிது; அதிலும் நிறைவேறாத காதல் கொடி தினும் கொடிது. அதற்கு மேலும் என் போன்ற நெஞ்சில் துணி வில்லாத—காதலிக்க வலுவில் லாத—இதயத்து உணர்ச்சிகளை வெளியே சொல்லத் திராணி யில்லாத சொக்கட்டான் காய் களுக்கு காதல் மகா கொடிது.

நான் முடித்துக் கொள் கிறேன். என்னைத் தெரிந்து கொண்டாய். உன்னை நேற்று வரை தெரிந்துக்கொள்ள வேண் டும் என துடித்துக் கொண் டிருந்தேன். இன்று அந்த எண் ணத்தை மாற்றிக்கொண்டு விட் டேன். ஏதோ அர்த்தமில்லாத—அசாதாரண மகிழ்ச்சி என்னுள் குதியாட்டம் போடுகிறது. அது போதும். அதைப் பாழாக்கமாட் டாய் என நினைக்கிறேன்.

அன்பு,
ராஜன்."

சிலா ஒரே மூச்சில் கடிதத்தை முடித்துப் போட்டாள். 'ஐயோ பாவம்' என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து குதித்தன.

"அவன் அழகன்; அப்பாவி, சூது வாது தெரியாதவன். என்னை அவன் காதலிக்கிறான். ஆனால் எனக்கு அவன்மீது காதல் ஏற்படவில்லை அவனுக் காக நான் பரிதாபப்படுகிறேன்" இதைத்தான் அவளால் கூற முடிந்தது "என்னைக் காதலிக் காத ஒருவரை நான் காதலித்துக் கொண்டிருக்கிறேனே" என்று அவள் வெளியே எப்படிக் கூறு வாள்!

"அக்கா—

எட்டிப் பார்த்தாள். அந்தப் பரிதாபத்திற்குரியவன் வீட்டு குழந்தை 'மாலா' வந்துகொண் டிருந்தாள். அவள் கையில் ஏதோ ஓர் மஞ்சள் காகிதம் இருந்தது. என்னவோ குருட்டு வேகத்தில் சிலா அதைப பிரித் தாள். ராஜனின் கல்யாண அழைப்பிதழ் அது. "இதை என் பெயருக்கு எழுதத்தான் அந்த மகானுபாவன் கை நடுங் கிற்றுமோ!" அவனின் முறைப் பெண்தான் அவனை மணந்து கொள்வதாக தெரிந்தது—

வந்த குழந்தையின் வாயைக் கிளறிவிட்டு வேறு பல விஷயங் களையும் தெரிந்து கொண்டாள்.

கல்யாணத்துக்குப் பிறகு மாப் பிள்ளைக்கு டேராடூன் விமான நிலையத்தில் வேலையும் வாங்கி வைத்தாராம் மாமனார். அடிக் கடி தூரதேசப் பயணம் செய் யும் அவன் எங்கே இனிமேல் சென்னைப்பக்கம் தலைகாட்டப் போகிறான்.

போகட்டும்! கல்யாணம் செய்து புதுக்குடி ஆரம்பிப்ப தற்கு முன் பழையன—உதவா தன அத்தனையும் கழித்துவிடும் 'பெருநோக்கோடு, தன் இத யத்தை அரித்துக்கொண்டிருந்த உணர்ச்சிகளை கடிதமாகக் கொட்டிவிட்டு "பதில் வேண் டாம்; காதல் வேண்டாம்" என்று முடித்து முழுக்கு போட்ட அந்த பெருந்தன்மையான அப்பாவிக் கதாநாயகனுக்கு தன் அனுதா பத்தைத் தெரிவித்து பதில் எழுதவேண்டும் என்று அவள் நினைக்கவில்லை.

ஊம்!—

அவள் உள்ளத்தைக் கீறிக் கொண்டு ஏளனப் பெருமூச் சொன்று சீறியது.

தன்னை அடைய முடியாமல் ஏங்கிய ராஜனை நினைத்து வெளி விட்ட பெருமூச்சோ அல்லது தானும் சுகுமாரனின் காதலைப் பெற முடியாமல் இப்படித் தவித்துக் கொண்டிருக்கும் போது தன்னையொத்த உள மொன்றின் தவிப்பை அறிந்து விட்ட ஆறுதல் பெருமூச்சோ தெரியவில்லை.

ஆனால், ராஜன் அவளுக் கெழுதிய கடிதத்தில் 'பதில் வேண்டாம்; காதல் வேண்டாம்" என்றிருந்தது. சிலாவோ தன் கடிதத்தில் "பதில் வேண்டும்; காதல் வேண்டும்" என்று எதிர் பார்த்தல்லவா எழுதியிருக் கிறாள்; பாவம்! ★

# அவனும் அவளும்!

வான்முட்டும் பெருவரைகள்! தேன் சொட்டும் சிறு மலர்கள்! கருமுகில் நெளியும் ஒளி மின்னல்! பிறங்கு தவழ்ந்து கறங்கும் நெடு வெள்ளருவிகள்! வானவில்லின் வண்ண நிறம்! முத்தும் மணியும் வைத்திழைத்த முகில் கிழி நெடுமாடம்! நீலவான் நீந்தும் வெண்மதி ஓடம்! கண்சிமிட்டும் விண்மீன்கள்! குதித்தோடும் இளமான் கள்! கீழ்த்திசைக்கிளறி ஒளிறும் ஒண்சுடர் கதிரவன்! நெளிந்தோடும் சிற்றாறு! வளைந்துவரும் கானாறு! பளிங்கு பிளந்து விளங்கு தண்சுனைகள்! துள்ளும் கயல்! தோகைமயில்! கரும்பூத அரும்பவிழ் அழகு முல்லை! நிலவழகன் முகம் நோக்கி இதழ் விரித்து சிரிக்கும் குமுதம்!

இப்படி இன்னும் பலப் பல! அனைத்தும் அவன் எண்ணத்தில் உருவாகி வண்ணத் தூரிகையில் கலந்து புது வடிவம் பெற்றுப் பொலிவுறும்! இலக்கியம் கூறும் இயற்கைக் காட்சிகள் பொய்யுரையன்று, புனைந்துரையு மன்று, அவை மெய்யுரையே என்பதை அவன் தீட்டும் ஓவியங்கள் காட்டும். காவியக் காதற்காட்சிகள் அவ் வோவியக் கலைஞனின் கைவண்ணம் பெற்று மிளிறும்! காதலும் வீரமும் அவன் தூரிகையில் கலந்து உறவாடும்! இயற்கை விளையாடும் இன்ப நிலையம் அவன் இல்லம்!

அன்று அவன் கலையில் ஒரு சிறு குலைவு! ஓவியத்தில் உயிரோட்டம் இல்லை! இயற்கை படைத்த எழிற்காட்சிகள் அத்தனையையுமா அவன் தீட்டிவிட்டான்? இல்லையே! எவ்வளவோ காட்சிகளை அவனுக்குக் காணிக்கையாக்க அதோ, தெரியும் அச்சோலை காத்திருக்கும்போது...!


அவன் கால்களை சோலை நோக்கி இயங்க, விழிகள் அச்சோலையிலே படம்பித்துக் கொண்டிருந்தன. சோலை யிடையே அவன் கண்ட காட்சி ஒரு கணம் அவனைத் திகைக்க வைத்துவிட்டது. எத்தனையோ இளங்கொடிகள் உறுதுணையின் அரவணைப்பில் சிக்கியிருக்கும்போது, அந்த ஒரு கொடி மட்டும் அந்தரத்தில் நெளிந்து நலிவானேன்? அதற்குப் பற்ற ஓர் கொம்பில்லை! படர ஓர் பந்தலில்லை! பரிதாபம், கொம்பின்றித் தவித்தது அப்பூங்கொடி!

அவன் அருகில் சென்றான். அந்தப் பூங்கொடியும் நடந்து கொண்டிருந்தது. அவனால் நம்ப முடியவில்லை! விழிகளை விரித்துப் பார்த்தான்! இன்னும் அருகில் சென் றான்! அங்கே பூங்கொடியைக் காணவில்லை; பூங்கொடி யாளைத்தான் இப்பொழுது கண்டான்!

அவனைச் சுட்டெரிப்பதுபோல் பார்த்தன அவள் சுடர் விழிகள்! அப்பப்பா! அங்கிருந்து விடுபடுவதே பெரும் பாடாய்ப் போய்விடுகிறது அவனுக்கு! அவன் உள்ளத் திலே அவள் மூட்டிவிட்ட காதல்தீயுடன் குடிசை நோக்கி ஓடுகிறான்.

பற்றக் கொம்பின்றி பரிதவித்த கொடிக்குக் கொம்பாக அவன் சென்றான். ஆனால் அப்பூங்கொடியாளோ தன் சின விழியை அம்பாகக் கொண்டு அக்கொம்பின்மீது வீசி னாள். இது முதல் சந்திப்பு! இயற்கைதானே இப்படி நிகழ்வது! அவ்வோவியக் கலைஞனின் உள்ளத்திலே அவள் நீங்கா இடம் பெற்றுவிட்டாள்! அவன் வண்ணத் தூரிகை, திரைச்சீலையிலே நெளிந்துக் கொண்டு இருக் கிறது. இப்பொழுது, சோலையில் கண்ட உயிரோவியம், சீலையில் உருவாகி மெல்ல உயிர்பெற்றுக் கொண்டிருந்தது. அன்றிலிருந்து பெண் உருவத்திற்கு அவள் அவனுக்கு இலக்கணமாக விளங்கினாள். அவள் அவனைக் கவிஞ னாக்கினாள்; கலைஞனாக்கினாள்! உலகமெல்லாம் அவள் கண்களின் எழில் பரவின. அவள் கூந்தல் புகழ்பாட ஆரம்பித்தது. எப்படி? அவன் வரைந்த ஓவியங்கள் முழுதும் அவளைப்போலவே இருந்தன.

—இரா. கோதண்டராமன்.



## ௬. ஊடல் வெண்பா.

தொட்டால் துடிப்பாள் துடியிடையாள்; தொட்டகரம்
விட்டால் வெறுப்பாள் வெதும்புவாள்;-இட்டமுடன்
ஊடுவதும் சாடுவதும் ஓடுவதும் வாடுவதும்
கூடுவதும் மாதர் குணம்!

—மா. சுப்பையா, நாரைக்கிணறு.

❋

"புன்மைச் செயலாம் புகைப்பிடித்தல் விட்டொழித்தேன்
இன்னுமேன் கோபம் எழில்மானே?"—"மன்னவரே!
அச்செயல்போல்; நாசித்தூள் அறவே ஒழித்தால்தான்
கச்சகற்றச் சம்மதிப்பேன் காண்!"

—து. சுப்பராயலு, பெரியகுளம்.

❋

கூடிக் களித்திருக்கக் கூப்பிட்டால் வாராமல்
ஓடி ஒளிவதென்ன ஒண்டொடியே!-"நாடி
மகிழ்ந்தாள் மணமாகா மங்கையெனக் கூறி
இகழுமே இவ்வுலகம் இன்று."

—இரா. மல்லிகா, விழுப்புரம்.

❋

பச்சைக் கிளியழகே! பாடும் குயில்இனமே!
அச்சம் உனக்குண்டோ அண்டிக்கொள்?—"மச்சான்!
உணவினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது."

—செ. வெற்றிவீரன், நாமக்கல்.

❋

மாலை மயங்கவில்லை மல்லிகைநான் சூடவில்லை
ஆலைச்சங் கின்னும் அலறவில்லை-சாலையதில்
மக்கள் குரலோசை மங்கவில்லை நீர்நெருங்கல்
தக்கதல என்றாடி னாள்.

—தங்கம், குரிச்சிக்கோட்டை.

❋

பூப்போட்ட பட்டுப் புடவை உடுத்தவள்
கூப்பிடப் போயுணவில் குந்தியபின்-சாப்பாட்டில்
உப்பில்லை என்றதும் ஊடினாள் அன்பிற்குத்
தப்புகள் தான்தெரியா தென்று.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

❋

இன்பம் இருவருக்கும் இன்றிரவு என்றேன்நான்
துன்புறு நிருப்பதுவாய்ச் சொல்லிவிட்டால்—பின்புஅவள்
என்ன நினைத்தாளோ 'இம்'மென்றாள் நான்மகிழ்ந்தேன்
பின்னுமோர் 'இம்'போட்டாள் பெண்!

—பே. சா. தனராசு, நாமக்கல்.

❋

கார்குழலின் பூவதனக் காரிகையே! பைங்கொடியே!
நீருலவும் சேல்நிகர்த்த நீள்விழியே!-நேர்புடையாய்!
தேமதுரத் தூமொழியே! செம்பவள வாய்முத்தே!
தாமதமேன்? நீயின்பந் தா!

—மு. கு. வேலவன், கருவை.

❋

ஆரத் தழுவி அதரப்பூத் தேன்குடிக்க
வீரத் தனத்தை விரித்துரைத்தேன்-வீரரென்றால்
கன்னித் தமிழ்காக்கக் காலமேன் தாழ்த்துகின்றீர்
சுந்தரரே என்றாள் சுளித்து.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

❋

முல்லைமலர் கேட்டேன் முழுமனதாய் இன்றெனக்கு
மல்லிகையைக் கொண்டுவந்த மச்சானே-சொல்லிடுவீர்
எல்லையிலா இன்பத்தை எய்திடவே நும்முளத்தில்
மல்லிகையாள் போட்டாளோ மை!

—சி. பி. சாமி, சுவால்பேட்டை.

❋

கோபம் பறந்ததடி; கொஞ்ச விழையுதடி;
தாபம் தணித்தின்பம் தாராயோ?-நாபணிந்து
பாசாங்கு செய்யாதீர்; பட்டதெல்லாம் போதுமே;
மோசம்போ கேன்இனி மேல்!

—கும்பகோணத்தான், வசந்தபுரம்.

❋

பெண்ணுளை என்னுயிராம் பெற்றியுடை நங்கைதனை
"வெண்ணிலவே!" என்று விளித்தேனல்-கண்பனிப்ப
"எற்களங்கம் கண்டீர்நீர் என்னிடத்தில்"என்றாடிப்
பொற்கொடியாள் போனாள் புறம்!

—கே. சீனுவாசன், செங்கற்பட்டு.

❋

செம்பஞ்சுக் காற்றுக செம்மேனி என்னுடலின்
வெம்மைக்கு ஆற்றுமோ? வென்றேன்நான்;—உப்புடலின்
தன்மைக்கு ஏற்றவளும் யாரென்றே கேட்டுப்பின்
வன்மையோ டோடினாள் வந்து.

—சிவ. இளம்பரிதி, கரந்தை.

❋

கண்ணேயென் றிட்டேனு மற்றொருகண் யாரென்றாள்
மின்னே எனநான் மறைவேனே-யென்றிட்டாள்
பொன்னே மணியெனப் போகும் விலைக்கென்றாள்;
என்னே யிவள்காட்டும் இடர்.

—ச. சவகர்லால், அழகப்பாபுரம்.

❋

இரவு பகலாய் இடுகுறிகட் கேற்ப
கரவாது சந்தித்த காளை—உறவினர்கள்
தூற்றும் அலர்துடைக்கத் தோழீ! எனைமணந்து
தேற்றாரோ உள்ளம் தெளிந்து.

—கு. இரமாதேவி, சென்னை-1.

❋

இன்பத்திற் கின்பம் எழில்சேர்க்கும் ஊடலே
என்றாலும் போதாதோ? இன்னமுதே!—இன்னமும்
ஊடிநீ என்னை ஒதுக்காதே! ஓருடலில்
கூடிப் பெறுவோம் குளிர்ச்சி!

—தமிழடியான், மேலப்பாளையம்.

❋

நல்லிரவொன் றைக்கழிக்க நானவளை உச்சிமோந்து
மல்லிகைப்பூ வாடை மயக்குதென்றேன்-வல்லியவள்
பூதான் மயக்கிற்றோ பொன்னுடலும் வேண்டாமோ
போவீரென் றாளென்னைப் பொய்க்கு!

—பழனிவேலன், கணேசபுரம்.

❋

"நீயும் தமிழும் நிகராவீர் எந்தனிரு
பாயும் கருவிழிக்கு என்றேன்யான்—சேயுடையாள்
நான்பெற்ற செல்வன் நடுத்தெருவில் போவதோ
ஏன்பெற்றேன்" என்றுபார்த்தாள் இடிந்து.

—து. திருநாவுக்கரசு, கழுதூர்.

❋

தொட்டிழுத்து நள்ளிரவில் "தோகையேநீ ஆர்வமுடன்
கட்டியணை" யென்றுரைத்தார் காதலவர்!-எட்டிநிற்பீர்
தொந்தரவு செய்யாதீர்? தூங்கிடுவீர் என்றதனால்
வந்ததடி எனக்கிங்கே வம்பு!

—க. தங்கவேலன், சேர்வைநகர்

❋

நன்மலரில் ஊறும் நறுந்தேனை உண்டதற்பின்
புன்மை எருக்கதனைப் போயணையும்-வண்டனையீர்!
பல்லோர் நுகர்ந்தெச்சில் ஆக்கிடுமப் பாவையரைப்
புல்லி அணைத்திடுவீர் போம்.

—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்.

❋

அட்டிகை கேட்டேன் அழகுவளை கேட்டேன்
தட்டிக் கழிக்கின்றீர் தயங்குறீர்"-கட்டமுதே.
மென்னார் உன்மேனி பொன்னகை சூடிடுமேல்
புண்ணாகிப் போமே சொல்.

—பொன். இலக்குமணதாசன், சென்னை-5.

❋

அண்ணாவின் கூட்டம்என் றேயறிந்தும் சொல்லாமல்
நண்பரொடு நாடகம்நீர் நாடியுளீர்—நன்றுமக்குத்
தென்னன் மொழிப்பற்றும் தென்னாட்டுப் பற்றுமில்லை
என்றாடி னாளென்னில் லாள்.

—ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

ஆசிரியர்: கண்ணதாசன், அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணைசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்ந